தனிப்பிரதி விலை அணா 0—1—6

Reg. No. M 3036. 1938-ஆகஸ்டு 1.

"PAHUTHA UDAVU" (REASON)

மலர் 3. இதழ் 9.



பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு, வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

ஆத்திகத்தால் வரும் கேடுகள் (பாட்டு) (வீ. வீராசுவாமி)	1
தமிழர்களுக்கு வேண்டுகோள் (கா. சுப்பிரமணிய பிள்ளை)	3
உலக அமைப்பைக்கொண்டு கடவுளை நிரூபிக்க முடியாது (ஜீன் மெஸ்லியர்)	11
ஒழுக்கம் (சு. வெ. ரா.)	15
ஹிந்தி ஆராய்ச்சி	18
தந்திர வித்தைகள் (எப். சிங்காரவேலு)	24
மாணிக்கம் (கதை) (துளஜாராம்மாவ்)	34
காலஞ்சென்ற (ஸர். ஜே. ஸி. போஸ்)	42
காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு.	46
மதநூல்கள் (சார்லஸ் டி. கோர்ஹாம்)	49
இந்து புராணங்கள் (எஸ். வி.)	60

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1938 ஜனவரி 1. { இதழ் 9.

ஆத்திகத்தால் வரும் கேடுகள்.

(புளியங்குடி வீ. வீராசுவாமி.)

"ஆண்டவன் தரிசனமே" என்றமேட்டு.

ஆத்திகத்தாலே வீழ்ந்தோம்—கிளியே
நாத்திகத்தாலே வாழ்வோம் [ஆத்தி]

"மோக்ஷ" "நரக" மென்னும் முன்னோர் வார்த்தை
களாலே
மூடபக்தியாலுழன்று—கிளியே
"முக்தி" கிடைக்குமென்று

ஆரியர் சூழ்ச்சியாலே அறியாமல் மோசம் போனோம்
அல்லும் பகலும் உழன்றோம்—கிளியே
"அவனடி" கிடைக்குமென்று

தீராத நோய்க்கிடமாம் தீய காற்றக்குளத்துத் தண்ணீர்
"தீர்த்த"மென்று காம் குடித்தோம்—கிளியே
தீரும் நம் துயரமென்று

காணிக்கை யென்றுசொல்லிக் கழிசடைப் பார்ப்பனர்க்கு
காசைசக் கொட்டிக் கொடுத்தோம்—கிளியே
காட்டுவார் "கைலாச"மென்று

குடிக்கக் கஞ்சியிலாது குந்தக் குச்சிலில்லாது
குழந்தைகளை வாடவிட்டோம்—கிளியே
குற்றுயி ராகிவிட்டோம்

சாதி சமயத்தாலே சண்டாளக் கூட்டத்தாலே
நீதி கிடைக்கவில்லை—கிளியே
நிர்க்கதி யாகினோமே

'கடவுள்' பெயரைச் சொல்லி, கண்டகண்டபார்ப்பனர்கும்
காசைப் பறித்தனரே—கிளியே
கடன்பட்டு வாழ்ந்தோமே

"கடவுள்" "மதம்" "சாத்திரம்" கசடர் கற்பனையென்று
காறியுமிழ்ந்திடுவாய்—கிளியே
கற்சிலை தெய்வங்களை

மூடச்சாத்திரத்தை முன்னோர்கள் சூத்திரத்தை
வேரற காமறுப்போம்—கிளியே
வெட்டியே வீழ்த்திடுவோம்

"விடுதலை" "குடி அரசு" வேண்டும் "பகுத்தறிவு"
விரும்பிடுவீர் தினமும்—வீராசுவாமி
வினம்பினேன் பார்முழுதும்

தமிழர்களுக்கு வேண்டுகோள்.

(கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L.,)

26—12—37-ந் தேதி திருச்சியில் நடைபெற்ற தமிழர் மகாநாட்டை திறந்து வைத்த கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்கள் பேசியதாவது:—

தமிழன்பர்களே,

தமிழர் என்பார் தமிழைத் தாய்மொழியாக உடையவர்கள் ஆவர். தமிழ் நாட்டிற்பிறந்தும் தமிழைத் தாய்மொழியெனக்கருதாதவர் தமிழராகார். தமிழ் நாட்டிற் பிறவாதிருந்தும் தமிழைத் தாய்மொழி போற்போற்றுபவரைத் தமிழர் என்பது இழுக்காகாது. தமிழ் நாகரிகத்தை உயர்ந்ததெனக் கருதுபவருந் தமிழரே. தமிழ் நாட்டிலே தமிழிலேயே இறைவனை வாழ்த்தி வழிபடல் வேண்டும்; தமிழிலேயே சமயச் சடங்குகள் யாவும் நடைபெறல் வேண்டும்; தமிழிலேயே ஆசியவ்நிகழ்ச்சிகள் எழுதப் பெறல் வேண்டும்; தமிழிலேயே எக் கலைகளையும் கற்பித்தல் வேண்டும்; தமிழிலுள்ள அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாத்தல் வேண்டும்; தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஒன்றே கட்டாயமொழிப் பாடமாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுபவரே உண்மைத் தமிழராவர். உண்மைத் தமிழர் ஒருங்கு வீற்றிருந்து தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கம் நாடும் பேரவை தமிழர் மகாநாடு எனப் பெயர்பெறும். இத்தமிழ்ப்பேரவையிற் புகுவோர் நினைவில் வைத்தற்குரிய சிலவற்றை இங்கே குறிப்பிடக் கருதுகின்றேன்.

தமிழ்த்தாய்க்குத்தொண்டு செய்வதில் உண்மையாகஉழைப்பவர்களுள் சாதி சமயம் பற்றிய பிளவுகள கருதப்பட மாட்டா. பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், கிறிஸ்தவர், மகமதியர், ஐரோபபியர் முதலிய யாவரும் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதில் ஒன்று சேரலாம். பல் வேறு வகையாகப் பிரிந்து நிற்கும் தமிழர் யாவரையும் ஒற்றுமைப்படுத்துதற்குரிய சிறந்த கருவி தமிழ்மொழிப்பற்று ஒன்றேயாகும். தாய்மொழிப் பற்றில்லாத தாய்நாட்டுப் பற்று உயிரில்லாத உடம்பு போல்வதாகும்.

தமிழர் சமத்துவ உணர்ச்சி.

தமிழ்அறநூல், 'பிறப்போக்கும் எல்லா வுயிர்க்கும்'' எனவும் தமிழ்ச் சமயநூல் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' எனவும் பழந் தமிழ்பனுவல் ''யாதும் ஊரே யாவருங் கேளிர்'' எனவும் முழங்குங்காலை தமிழ் மக்களைச் சாதியாற் வேறு செய்து, சமயத்தால் மாறு செய்து, மொழியினாற் கூறு செய்து அவர்களுக்குள் ஒற்றுமைக் கேடுண்டாக்கியது, யாது?

மாத்தின் அடியில் யாவருங் கலந்து முதல்வனைத் தொழுத தமிழர் பால் வருணம்பற்றிக் கோயில் புகுதல் கூடாது என்ற கோட்பாடு எப்படி நுழைந்தது? தொடுக்குங்கடவுட்பழம் பாடற் றொடையின் பயனாம் பாமற்கு மிடுக்குமிகுந்த உலை கொண்டு நிகழ்த்தும் பூசனை எவ்வாறு உவப்பாயிற்று? நிறை மொழிமாந்தர் மறைமொழி நடுவிற் பிறமொழி மந்திரப் பெருமை புகுந்ததேன்? மலையிலும் கடலிலும் காட்டிலுங் காட்டிலும் பாலை வனத்திலும், பாமா மக்களும் பண்பாய் ஒலித்த யாழும் குழலும் செய்தியறைந்த பறையும் எங்கே போயின? இசைக்குரியது எனையர் மொழியெனும் வசைக் கருத்து யாங்ஙனம் வந்தது? பன்னிரு முறையிலும், நாலாயிரப் பனுவலிலும் பயின்ற இன்னிசைப்பண்ணும் திறனும் பாந்து நிலவாமைக்குக் காரணம் யாது? ஓவியக் கலைக்கும், உயரிய சிற்பத்திற்கும் உரிய தமிழ் நூல்கள் எங்கே ஒளித்தன? சித்தர் மருத்துவம், சிறந்த வாதநூல் வானூல், கற்பநூல், யோகத் தமிழ் நூல், அறிவர் ஞானநூல் என்பன மாசுபடிந்து மங்கிக் கிடத்தற்கு மந்திரம் செய்தார் யார்? தமிழர் தம் சமய நிலையங்களிலும், அற நிலையங்களிலும் மூடப் பத்தி தலையெடுப்ப முதன்மையான அறிவைக் கொன்றது யாது? ஒன்பவை போன்ற வினாக்கட்குத் தக்க விடை தேட வேண்டும்.

தமிழர் வீழ்ச்சிக்குக் காரணம்.

தேடுமிடத்து கல்லாமை யாலும், நூல் காவாமை யாலும், கற்றாரைப் பேணாமையாலும் தமிழினத்தார் தாழ் நிலை யடைந்து எதிரிகளின் சொல்லம்பிற்கு இரையாகிப் பொய்ச் சொற்பொழிவென்னும் சாட்டினாற் பிணிக்கப்பட்டு 'மெய்யுடை யொருவன் சொல்ல மாட்டாமையால் பொய் போலும்மே! பொய் போலும்மே!! பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால் மெய் போலும்மே! மெய்போலுமே!!' என்ற

முதுமொழிக்குத் தக்க எடுத்துக் காட்டாக இலங்குதலே தெளிவாகத் தெரியவரும். ஆரியருக்கு நாகரிகத்தைக்கொடுத்தது அவரது ஆடம்பர மொழிகளைத் தாங்கள் பெற்று அம் மொழியைத் தாமும் அவரும் பொது மொழியாகக் கருதித் தம்முடைய கருத்துக்களை அது வாயிலாக விளக்கவே மொழியுங் கருத்தும் ஆரியருடையனவே என்ற தப்புக்கொள்கை தலையெடுக்கலாயிற்று. இந்நுட்பத்தை ஆய்ந்தறிந்த டாக்டர் கில்பேர்ட் சிலேட்டர் (Gilbert Slater) "While the Aryans were dravidised in Culture, the Dravidians were aryanised in language" என்று சுருக்கமாகவும் அழகாகவுங் கூறினார்.

சகம் முழுதும் பரவிய தமிழ்.

'ஞாலம் அளந்தமேன்மைத் தெய்வத்தமிழ்'எனச் சேக்கிழார் பெருமான் அருளிய வண்ணமும்; சதுர் மறை ஆரியம் வருமுன் சக முழுதும் நினதாயின் முது மொழி நீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே' என்று காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் மொழிந்த வண்ணமும் ஒரு காலத்தில் உலகமெங்கும் தமிழ் மொழியானது பரவியிருந்த போது மதியிற்களங்கம் போல அதன் பகுதி ஒன்றில் ஆரியங்கிளைப் படரயிற்று. அதை மொழி நூலாராய்வார் நன்கறிவார். அதனை இங்கு விரிப்பின் பெருகும். நம்மளவில் பார்க்கும் பொழுது இந்திய நாடு முழுவதிலும் குமரி முனைக்குத் தெற்கேயும் தமிழானது பதினாயிரம் ஆண்டுகட்கு முன் பரவிச் செழித்தோங்கிற்று. வடமேற்கு இந்தியாவில் ஆரியம் தோன்று முன்பே செந்தமிழ் நாகரிகமும் செம்பொருள் வழிபாடும் காடெங்கும் சிறப்புற்று விளங்கின. அவற்றின் பழமையைக் குறித்து 51 ஆண்டுகட்கு முன்னேயே காலஞ் சென்ற சென்னைக் கவர்னர் கனம் கிராண்ட்டப் (Grant-Duff) ஆய்ந்துணர்த்த அழகுமொழி தமிழ் காடெங்குந் தங்க எழுத்தில் பொறிக்கத் தக்கது.

Their institutions... go back to a period as compared with which the hoariest Indo-Aryan Antiquity is as the news in Reuters' latest telegram.

பண்டைத் தமிழர் சிறப்பு.

இறந்தாரை எழுப்பும்மந்திரம் வல்லராய்த் தண்டமிழர் இலங்கினார் என்பது இருக்குவேதத்தால் குறிக்கப்பட்ட தொன்றா

கும். நெருப்புக் கடவுளை வழிபட்ட ஆரியக் குருக்கள் சிலர் முதன் முதல் வட நாட்டில் வாழ்ந்த தமிழ் மன்னன் ஒரு வன்பால் உயர்ஞானம் கற்றனர் என்பது உபநிடத ஆராய்ச்சியால் புலனாகும். எல்லைகடந்த செல்வச் செருக்கில் நிலைத்த தமிழர் அறம் பொருள் இன்பம் வீடு கூறும் மறைநூல் மறந்தனர். அகத்தியர் முதலிய ஐம் முனிவர் உணர்த்திய அருள் நூல் என்னும் ஆகமம் இழந்தனர். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாம் என்பது போல ஆரியர் வேதமும் தந்திரமும் தலை நூல்களாயின. தம் வாலாற்றினை அறவே மறந்த ஆதித்தமிழர் ஆரியர் சூழ்ச்சியால் சாதி வலைக்குள் அகப்பட்டனர். ஆரியச் சொல்லம்பால் தாக்கப் பட்டுத் தாய்மொழி பேசும் நாடுகுறுகப் பெற்றுக் கிளைமொழியாகிய கன்னடம், தெலுங்கு முதலியவற்றை இழந்து வட வேங்கடம் குமரிக்குள் ஒடுங்கிக் கோயிலிலும் வீதியிலும் வீட்டிலும் ஆற்றிலும் எவ்விடத்தும் ஆரிய மொழிக்கும் அம்மொழித் தலைவருக்கும் அடிமையாயினர். பண்டைத் தமிழ்ப் பனுவல்களும் பாங்கிற் சிறந்த வாலாறுகளும் பதுங்கிக்கிடப்ப, ஆரியக் கலைகளும் காவியங்களும் ஆடல்களும் பாடல்களும் யாண்டும் பரவித் தண்டவமாடலாயின.

"ஹிந்திப்" புரட்டு.

இங்ஙனம் விளைந்த குறைகள் பலப்பல. அவையாவற்றாலும் ஊனம்படாதது தனது உண்மையியல்பின் செம்மையினால், பழையவற்றுள் பழையதாயும் புதியவற்றுள் புதியதாயும் மூவாது சாவாது என்றும் உயிர்வாழும் தன்தமிழ் அன்னை இன்னும் உயிரோடு வாழ்ந்து வீறுற்றிருப்பதைக் கண்டு பொறாமைகொண்ட பகைச் சொல்லினர் ஆரியம் முதலிய மொழி பேற்ற தமிழ் மொழியையும் இறந்த மொழியாக்குங் கருத்துடன் அவள் மக்களின் அறியாமையைக் கருவியாகக்கொண்டு, அவள் இன்னுயிரைச் செகுத்து விடலாமென்று துணிந்து கொண்டு இற்றைக் காலத்தில் முன் வந்திருக்கின்றனர். ஹிந்தி என்னும் குளிர் சந்தியை அவள் இனிய உடம்பில் சிறிது சிறிதாக நுழைத்து விடலாமென்று கருதுகின்றார்கள். ஹிந்தி வளர இடம் பெறுமாயின், இன்னுஞ்சில ஆண்டுகளில் உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் தமிழ் மணம் அறவே யொழிந்து பள்ளிப்புத்தகம், பத்திரிகை யுலகம், சினிமாக்காதை, சிறந்த நூல்கள், செவ்விய பாடல், ஆசியல் நிகழ்ச்சி, ஆலயப் பூசனை, அகத்திற் பேசும் உறவினர் மொழி ஆயவெல்லாம் ஹிந்தி மயமாய்த் தமிழர் நாடும்

ஹிந்தி நாடாகவே இந்தியநாடும் நடுவெழுத்தாய உயிரினை இழக்கும். உலக சரித்திரம் ஊனம் எய்தும். தமிழர் நாகரிகமே இந்திய நாகரிக உயிரெனும் நட்பம் ஒழிந்திடலாகும். தமிழர்க்கு இகழ்ச்சியும் கேடும் இதனின் வேறுது?

செய்கடன் ஆற்றத் தருணம் இதுவே.

இப்பேரிடையூற்றை நீக்குதற்குத் தமிழ் மக்கள் கண் விழித்துக் கடமையாற்றுஞ் சமயமிதுவே. கடமையை நிறைவேற்றுதற்கு உண்மைத் தமிழர் உடல் பொருள் ஆவி மூன்றும் அர்ப்பணம் செய்தற்குப் பிற்படலாகாது. மிகுதியால் மிக்கவை செய்வாரைத் தகுதியால் தாக்கித் தலைகுனியச் செய்யாவிடில் தமிழர் என்னும் பெயர்க்குத் தமிழ் நாட்டினர் தகுதியிலர் என்பதே முடியும். தமிழ் நாட்டில் தமிழைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதை எதிர்த்தவர்வர்கள் பலர், இப்போது இந்தியை வற்புறுத்திக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள். இனி எவரும் எவ்வகைத் தேர்தல்களிலும் அத்தகையார்க்கு முன்னேற்றங் கிட்டுமாயின் 'அறிவிலி' என்ற சொல் தமிழர்க்கே வாய்ப்புடைத்தாகும்.

நமது குறைபாடு.

தமிழரின் பெருங்குறை யாதெனின், தயவினால் தலைக்கேடு தேடிக்கொளல். அவர்கள் தம் உரிமையைப்போற்றுதலைத் தந்நலந்தேடும் தாழ்வென்ற நினைத்துத் தாழ்வடைபவர். வீரமாய் எதனையுந் தொடங்கி விடாமுயற்சியின்மையால் மோசம் போவார். தந்நூல் பேணாது பிறநூல் கற்பவர். உலகம் புகழும் தலை சான்ற கல்வி கற்பார் சிலர். அவர் சொற் கேளார் பலர். சுற்றத்துட் குற்றம் காண்பார், இனத்தார் பகைத்திருப்ப அயலார்க்கு வயிறார அழுகிடுவர். தமிழ்ச் செல்வர் பலர் எதிரியின் முகமன் வலையில் அகப்பட்டும் பெருமை பிதற்றி உரிமை இழப்பர்.

இத்தகைய குறைகளை எதிரிகள் நன்கறிவர். அன்னோர் சொல் கலங்காட்டி பொருட் பழம்பறிப்பர்; மாணவராய் நின்று ஆணவமாய் ஆசிரியராய் ஆட்சி புரிவார். தமிழரைப் பிரித்தாளும் பெற்றியில் இணையற்ற திறமைசான்றவர். எதிர்த்தாற் பதுங்கி அற்றம் பார்த்துத்தங்கருத்தை மெல்லென நுழைத்து இடைவிடா முயற்சியால் காலடைவில் தமது வெற்றி காட்டுவர். இந்நட்பங்களைத் தமிழ் மகாநாட்டுத் தலையறிஞர்

தங்கடமை நிறைவேற்றுமிடத்து மனதில் பதிவித்துக் கொள்ளல் வேண்டும்.

நாம் செய்ய வேண்டுவதென்ன?

இனிச் செய்யற்பாலன சில கோகுத்துரைப்பாம். தமிழ்ணையின் பெருமையைத் தமிழ் மக்கள் யாவரும் தெள்ளத் தெளிய உணரும்படி பத்திரிகையும் பிரசாரமும் ஓய்வில்லாமல் நடைபெறவேண்டும். தமிழின் ஏற்றத்தை உண்மையாகக் கருதும் எவரையும் நம்மவராகவே தழுவிக்கொள்ளுதல் வேண்டும். தமிழுக்கு உழைக்கும் அறிஞர்கள் நேரும் இன்னல்களை முற்பட்டு அகற்றல் வேண்டும். தமிழுக்கு நேராகவோ மறைவாகவோ ஊறுசெய்யும் பத்திரிகைகளை ஆதரியா தொழிதல் வேண்டும். போதுமான மொழிப்பற்று இல்லாத தமிழ்ச் செல்வர்களின் ஆதரவைக்கொண்டு பகைப் பத்திரிகைகள் பெருமிதமுற்று பெருகடை நடந்து பெருந்தீங்கு விளைக்கின்றன. அவர்கள் சூழ்ச்சியினின்று நம்மை விடுதலை செய்யும் வீரப் பத்திரிகைகளை வேளுன்றச் செய்தல் வேண்டும்.

சிறந்த தமிழ் நூல்களுக்கும் தமிழ்மாண்பு விளக்கும் ஆராய்ச்சி முறையில் உரைகண்டு வெளிப்படுத்துவதற்கும் பெருந்துணை புரிதல் வேண்டும். தமிழ் நாகரிகத்திற்குக் கண்ணாடியாய் அமைந்த தொல்காப்பியத்திற்கு எற்பட்டிருக்கும் உரைகள் அது தோன்றிச் சில்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின் வடநூல் ஒளியினில் வகுக்கப் பட்டனவாகும். உரைக்கேற்ப நூற்பாக்கள் புகுத்தப்பட்டும் திருத்தப்பட்டும் வைப்பு முறை மாற்றப்பட்டும் இருப்பதை ஆராய்ச்சியாளர் அறிவர். அவ்வுரைகொண்டு நூல் கற்பவர் கலப்பற்ற உண்மையைக் காண இயலாதவரோ யாவர். அவ்வாறே திருவள்ளுவர் நூலுக்கும் தமிழ் நலங்காட்டும் புத்துரை இனியே அமையவேண்டும். பரிமேலழகர்உரையில் கொள்ளத்தக்கன பல உள. எனினும் அதன் நிறம தமிழ் நிறமன்று. வள்ளுவர் கூறிய பொது அறத்தை ஒரு குலத்துக்கொருநீதி கூறும் மனு முதலிய நூல்களிற் காண்பவென்று அது கற்பிக்கின்றது. பெண் கல்வி வேண்டாமென்று பேசுகின்றது. ஆசியற் கொள்கைக்கு ஆரிய நூலில் ஆதாரம் தேடுகின்றது. காமத்துப் பாலும் வடவர்வழித் தென்கின்றது. அதனால் தமிழாது பண்டைப் பொது நெறி மறைவுற்று வருணக் கொள்கை மதிப்புறுவதாயிற்று. சங்க நூல்களுக்கும் தமிழர் மனப்பான்மையைத் தெள்ளிதின் உரைக்கும் தெளிவுரைகள் ஏற்படல் வேண்டும்.

புது நூல்கள் தோன்ற வேண்டும்.

தண்டமிழ்க் காப்பிய நலங்களைக் கவினுற விளக்கும் நற்றமிழ்வாசக நூல்கள் நவநவமாக நனி பரவுதல் வேண்டும். புராணப்படனுவல்கள் ஆராய்ச்சியில் புடைக்கப்படுதல் வேண்டும். மெய்யாராய்ச்சியில் நிலைபெறுவனவே தழுவத்தக்கன. வனைய தன்னளத்தக்கன. சரித்திரம் செம்மை பெறுதல் வேண்டும். தமிழின் வீழுமிய கருத்தும் நூலும் ஆங்கில முதலிய பிறமொழி தம்மிலும் பிறங்குதல் வேண்டும். சித்தர் நூலாராய்ச்சி செவ்விதிற்றிகழ்ந்து மருத்துவ சோதிட மந்திர யோக நூல் முறைகளைத் தெற்றெனவிளக்குந்தெளிவு நூல்கள் பலப்பல ஆதல்வேண்டும். மேனாட்டு அறிவியல் நூல்கள் பலவும் தமிழர் பாங்குற வமைத்தல் ஆங்கிலங்கற்றவர் முகற்கடமையாதும். கயமிக்க வடநூல் பிறநூல்கள் தமிழிற் சொணர்தல் அவ்வம் மொழியில் வல்லுநர்கடமை செந்தமிழிசைகளே தமிழ் நன்மக்களால் போற்றத்தக்கன. இசைவல்ல தமிழர் இன்றமிழ்ப் பாட்டே பாடுதல்வேண்டும். இசைத்தமிழ் முழுக்கும் தமிழ்மக்கள்யாவர் வீட்டிலும் நிறைதல் வேண்டும். நாடகக் கலைகள் தமிழர் சீரை நாடுதல் வேண்டும். நன்னாட்டுத்தமிழர்கள் வாழ்க்கைச் சிறப்பும் தொடர்பாடல் வளர்ப்பும் இன்பம் விரும் முதல் எண்வகைத் துணைவயிற்றிலும், பேசும்படச்சாலைகளிலும் பொருந்திய தமிழ்த்துணைமாதல்வேண்டும். ஓவியமும் சிற்பமும் ஒண்டமிழ் நாகரிவ்வனமுதல் வேண்டும், அவற்றை விளக்கும் நூல்களை தமிழின்கண்ணேமிகுதல் வேண்டும். தமிழ்கல்லாத தமிழருங் கற்றுநூலில்லாவீடும் தமிழகத்திருத்தல் கூடாது. சுருங்கக் கூறின் தமிழ் தமிழ் என்ற முழக்கம் நாடெங்கும் செழித்தல் வேண்டும்.

மெய்ம்மொழிப்பற்றில்லாதார் அதிகாரிகளாதல் கூடாது.

தாய்மொழி பேணாத்தகுதியில்லார்க்கு ஆசிரியல் அதிகாரம் கிட்டுதலாகாது. பல்கலைக் கழகங்களிலும் அவர்களுக்கு ஆக்கம் இருத்தல் கூடாது, எவ்வகைப்பொது நிலையங்களிலும் அவர்களுக்கு மதிப்பு எற்படுதல் கூடாது. இது பாமார் மனத்திலும் பண்டிதர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோற் பதிதல் வேண்டும். தாய் மொழிப் பகைவர்க்கு உரிமைச்சீட்டு உதவி உயர்வு கொடுத்தல் தமிழன்னைக்குச் செய்யும் நன்றியிற் பெருங் கேடாகும். தமிழ் நலம் நாடும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்க்கே மதிப்பும் மாண்பும் ஆசியலாற்றலும் கல்லூரித்தலைமையும் திண்ணமாக அமைதல் வேண்டும். தமிழ்ப் பொதுமக்கள் கண்ணுங் கருத்துமாகத் தமிழுக்கொண்டார்க்கே எவ்வகை உரிமைச் சீட்டையும் உதவுதல் வேண்டும். அங்ஙனம் உதவத்தவறுதல் மன்னிக்காத பெருங்

குற்றமாகும். இக்கருத்தினைத் தமிழர் என்பார் யாவருள்ளத்தும் நிலைபெற்றுப் பயனுறச் செய்தல் தமிழர் மகாநாட்டின் தலைக்கடமையாகும்.

தமிழ்ப் பெரியார்கள் திருநாள்.

தமிழுக்குழைத்து உயிரை அளித்த தமிழ்ப் பெரியார் திருநாள் எங்கும் கொண்டாடப்படுதல் வேண்டும். தமிழர் வீடுதோறும் தமிழ்ப் பெரியார் திருவுருவப்படங்கள் திகழ்தல் வேண்டும். அவர் திருநாள் கொண்டாடாது பிறநாட்டுத் தலைவர் திருநாள் மாத்திரமே கொண்டாடுதல் தமிழரின் உணர்ச்சியின்மையைக் காட்டும் இழிசெயலாகும். எந்நாட்டுப் பெரியாரினும் நம்நாட்டுப் பெரியார் தழிபெருஞ்சிறப்புடையரென்பதைக் கருதுதல் வேண்டும். அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர், திருமூலர், நாடன்மார்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சங்கப்புலவர்கள், பிற்காலப் பெரும் புலவர்கள், அருள்வள்ளல்கள் முதலியோர்க்கு ஈடாக பிறநாட்டுப் பெரியாரைக் கூறுதல் ஒண்ணுமோ! தமிழ்ப் பெரியார்க்குத் தனிச்சிறப்புச் செய்து பிற பெரியாரையும் போணுதல் நன்றே.

தமிழாது மொழிமாண்புடனே பிற மாண்பினையும் தமிழர் மகாநாடு காடுதல் வேண்டும். தமிழரின் சமுதாய ஒற்றுமைப் பொருட்டு, காகரிகத்திற்கு மாறில்லாமல், பல இனத்தாரும் உடன் உண்ணுதல், மகற் கோடல், மகட் கோடல் என்பனவற்றை யாரும் மறுத்துரைத்தல் கூடாது. அவ்வாறே ஒரு கடவுளுண்மை, உயிர்க்கிரங்குதல், மறுபிறப்பு, ஒரு வழிபாடு, ஒழுங்காசியல் என்பவற்றையும் பொதுக் கூட்டங்களில் மறுத்தலின்மை ஒற்றுமைக்கு உரஞ் செய்யும். தமிழரின் பொருள் வசதியின் பொருட்டுப் பாங்குமுதலியன நடத்தல், தங்கிடம், உணவு வசதியின் பொருட்டு மாணவர் விடுதி பொதுவிதிகள் அமைத்தல், சமய முன்னேற்றத்திற்காகத் திருத்தப் பிரசாரம் பயிற்றுதல், தொழில் வளர்ச்சிக்காகக் கல்லூரிகள், கழகங்கள் நிறுவுதல், வேறுவகை வளர்ச்சிக்கும் உரியதிட்டங்கள் வகுத்தல், முதலியன படிப்படியாக, ஆட்சிக்கு வருதல் வேண்டும். கல்வித்துறை, செல்வத்துறை, தொழிற்றுறை, அரசியற்றுறை, சமயத்துறை, முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழர் ஒற்றுமையுற்றுப் பெரு நலம் பெறுதற்கு ஆவனயாவும் ஆற்றுதல்கடனே.

தனித்தமிழ் மாகாணம் வேண்டும்.

தமிழர்க்கு மாகாணம் தனியே அமைதல் நன்மைகள் பலவற்றிற்கும் அடிப்படை யாகும். யாவற்றிற்கும் அடிப்

உலக அமைப்பைக் கொண்டு கடவுளை நிரூபிக்க முடியாது.

(ஜீன் மெஸ்லியர்)

—*—

இவ்வுலக அமைப்பைக் கொண்டே, இதை ஆளும் ஒரு அறிவுடைய ஜீவன் இருந்துதானாகவேண்டுமென்று மறுக்க முடியாமல் நிரூபித்துவிடலாம் என்று கடவுளை வணங்குபவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த உலக அமைப்பிற்குக் காரணம் அவசியமான சில அசைவுகளே யாகும் என்பதையும் அவ்வசைவுகள் சில சமயங்களில் நமக்கு சாதகமாகவும், சில சமயங்களில் பாதகமாகவும் இருக்கின்றனவென்பதையும் இவர்கள் உணர்கிறதில்லை. நமக்கு சாதகமாயிருக்கும் நிகழ்ச்சிகளை நாம் ஆதரிக்கிறோம்; பாதகமாயிருப்பனவைகளை வெறுக்கிறோம்.

படை மொழி பேணுதலே, ஆதலின் அதனை விரித்திங் குரைத்தாம். உலகமுழுவதும் ஒரு குடைக்கீழாண்ட உயர் தமிழ் மொழிக்கே இந்திய நாடு முற்றிலும் உரியது. நேற்றுத் தோன்றிய வம்பினை மொழிகள் தமிழ்க்கு முன்னர்த் தலையெடுக்காமல் அடங்கிச் செல்லப்பணித்தல் வேண்டும். அன்னையை மீறும் அகந்தை மொழிகளை அகற்றி ஒழித்தலே அறிஞர் கடமை. போலிப்பற்றை ஒழித்து நடுநிலை நின்று பொதுநலம்நாடின் இந்திமொழியினும் எங்கும்பாவிய ஆரியமொழியாம் ஆங்கிலமொழியே பொதுமொழியாக அமைதற்பாலது, ஆயினதிலொரு தமிழன் வடநாடுசென்றால் செல்லுங்காலை வேண்டுமாயின் இந்திகற்க. அதற்காகத்தாய்கொலை செய்தல் சால்புடைத்தன்று. இந்தக் கருத்தை எல்லாத் தமிழருங் கடைப்பிடித்தல் ஆகிய ஒரு பெருங்கடமை முற்றிலும் நிறைவேறின், இடையூறு யாவையும் எளிதில் விலக்கி அழியாப்பேரறிவும் அந்தமில் இன்பமும் எந்த காலும் தமிழர் பெறுவர். இதனின் இப்பெருங் கடமையும் பிற எப்பெருங் கடமையும் இறைவன் அருள்கொண்டு செவ்விதின் இயற்றுவான் தமிழர் இயக்கம் தழைத்தல் வேண்டும். தமிழர் இயக்கம் நீடுழி நிலவ, இத்தமிழர் மகாநாடு திறப்புற்றுச் சிறப்புற்றோங்குக.

ஆனால் இயற்கை எப்போதும் தன் வழியே போய்க் கொண்டுதானிருக்கிறது. அதாவது இன்னின்ன காரணங் களுக்கு இன்னின்ன காரியங்கள்தான் நிகழுமென்ற இயற்கை விதிகளை அனுசரித்தபடியே தான் இருக்கிறது. அவ்விதி களினின்றும் மாறுபட்டு வேறுவிதமான காரியங்கள் நிகழு வதே கிடையாது. ஆனால் நமக்குத் தெரிந்த காரியங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தால் நாம் சர்வ சாதாரணமாய் இருந்து விடுகிறோம். ஆனால் நமக்கு ஏற்கனவே தெரியாத ஏதே னும் புதிதான காரண காரியங்கள் நிகழுமாகில் அவைகளை உடனே "அற்புதங்கள்" என்று சொல்லிவிடுகிறோம். ஆனால் எல்லாம் இயற்கையாகவேதான் நடைபெறுகின்றன வென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த "அற்புதங்களை" கண்டதும், நமக்கு அவைகளின் காரணங்கள் புலப்படாத தினால், அவைகளைவிட இன்னும் குறைவாகத் தெரிந்த (ஒன்றுமே தெரியாத) ஒரு காரணத்தை (கடவுளை) கற் பித்துவிடுகிறோம். உலகமானது என்றும் கட்டுப்பட்ட ஒரு ஒழுங்கின்பேரில்தான் நடைபெற்று வருகிறது. ஒழுங்குமீறி என்றும் நடப்பதேயில்லை. ஆனால், ஒழுங்கு தவறுகிறது. என்று சொல்வோமேயானால், நம்முடைய அறிவுபிசகியே ஏதோ பிழையிருப்பதாகத்தான் அதற்கு அர்த்தம் உலகி லுள்ள ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு அணுவும், நாம் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, ஒரே சட்டத்தின் கீழ் கட்டுப்பட்டுத்தான் நடைபெறுகின் றன. கனமான வஸ்துக்கள் விழுவதும், ஆறுகள் ஓடுவதும், சமுத்திரத்தின் அலைகள் அசைவதும், காற்று அடிப்பதும், மழை பெய்வதும் கடவுள் கிருபையால் நடை பெறுகின்றன வென்று சொல்வதோடு, அவருடைய அநுக்கிரகத்திற்காக அவ னைப் புகழவும் செய்கிறோம். ஆனால் உண்மை எனவென்ற ஞால், பூகம்பங்கள், எரிமலைகள், வெள்ளப் பெருக்குகள், தொடத்து நோய்கள், பஞ்சங்கள் இவைகளுக்கெல்லாம் எந்த இயற்கையானது காரணமாகயிருக்கிறதோ, அதே இயற்கை தான் மேற்கூறிய சம்பவங்களுக்கும் காரணமாக இருக்கிறது.

உலகத்திற்கு ஒரு இயற்கை அமைப்பு காரணமாயிருக் கிறதென்பதைக் கேட்க ஆச்சரியப்படுவது எப்படி இருக்கிற தென்றால், உலகத்தில் இன்ன காரணங்களால் இன்ன காரியங்கள் தான் நிகழும் என்ற விதிகளைக்கண்டு ஆச்சரி யப்படுவது போலவேயாகும். ஒழுங்கிற்கு விரோதமான நிகழ்ச்சிகளைக்கண்டு பயப்படுவதானது, காரண காரியங்கள் வேறுபடுவதினால் ஏற்படும் மாறுபாடுகளை மறந்ததாகவே

யாகும். இயற்கையின் ஒழுக்கங்களைக்கண்டு ஆச்சரியப் படுவதானது, உலகத்திலுள்ள ஒவ்வொன்றையும் கண்டு ஆச் சரியப்படுவதாகவே யாகும். அதாவது, தன்னைத்தானே கண்டு ஆச்சரியப்படுவதை யொக்கும். ஒரு ஜீவனுக்கு ஒழுங்காக இருப்பது ஒழுங்கற்றதாகத்தானிருக்கும். கொடூர மான ஜீவன்களெல்லாம், தங்களிஷ்டப்படி நமக்கமுடியாதவை களை யெல்லாம் ஒழுங்கு மீறி இருப்பதாகத்தான் கருதுகின் றன. தங்களுடைய கொடுமையை செலுத்துவதற்குத் தடைகள் ஏற்படும் போதெல்லாம் உலகிலுள்ள ஒவ்வொன் றும் ஒழுங்குமீறி இருப்பதாகவேதான் அவைகள் நினைக் கின்றன.

அதெல்லாம் போகட்டும். கடவுளே இயற்கைக்குக் காரணகர்த்தாவாகவும், இயற்கையை நடத்தும் சக்தியாகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால், உலகி லுள்ள ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும் அவரே தான் காரண மாக வேண்டும். அவர் எந்தெந்த வஸ்துக்களுக்கு எந்தெந்த சக்திகளை கொடுத்திருக்கிறாரோ அந்தந்த வஸ்துக்கள் அந்தந்தச் செயல்களைச் செய்துதான் தீரவேண்டும். கடவுள் சாதாரண நடைமுறை விஷயங்களை மாற்றுவதென்றால் அவருடைய மாறாத்தன்மைக்குப் பங்கம் ஏற்படுகிறது. அவருடைய உலகில் ஒழுங்கே நிலவுவதாகவும், அதிலிருந்தே அவர் இருப்பது ருசுவாகிறதென்றும், அவருடைய அறிவு, சக்தி, நற்குணம் முதலியவைகளுக்கும் அதுவே அத்தாட்சி யென்றும் சொல்லுகிறார்கள். இது உண்மையானால், இவ் வுலகின் ஒழுங்கில் உள்ள முரண்பாடுகளுக்கும் அவரே கர்த்தாவென்று ஏற்படுகிறது. அப்போது அவர் இருப்பதே தகராறாகி விடுகிறது. அல்லது, அவருக்கு திடபுத்தி கிடையாது என்று ஏற்படுகிறது. அல்லது சக்தியில்லை யென்று ஏற்படுகிறது. அல்லது முன்யோசனை யில்லை யென்று ஏற்படுகிறது. அல்லது முன் ஜாக்கிரதை யில்லை யென்று ஏற்படுகிறது. ஆகையால் அவர் உபயோகப்படுத்த வேண்டிய சாதனங்களிலும் ஆயுதங்களிலும் அவர் பெரும்

ழை செய்துவிட்டார் என்று அவர்மேல் நாம் நியாயமாகக் குற்றம் சாட்டலாம். கடைசியாக இயற்கையின் ஒழுங்கானது கடவுளின் சக்தியையும் அறிவையும் நிரூபிக்கிறதென்று சொன்னால் அதிலுள்ள ஒழுங்கீனங்கள் அவருடைய பலஹீனத்தையும், அறிவற்ற தன்மையையும், திடமில்லாக் குணத்தையுமே நிரூபிக்கும்.

கடவுள் எங்கும் இருக்கிறார் என்று சொல்லுகிறீர்கள்; அவர் எல்லா இடத்தையும் நிரப்பிக் கொண்டிருக்கிறார் என்கிறீர்கள்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறீர்கள்; அவரே எல்லாவற்றிற்கும் கர்த்தா என்கிறீர்கள். இதெல்லாம் சரியென்றே ஒப்புக்கொண்டால், உலகிலுள்ள ஒழுங்கீனங்களுக்கும் கஷ்டங்களுக்கும் உங்கள் கடவுளே பொறுப்பாளியாவார் என்பதைநீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இயற்கையை சின்னாபின்னப்படுத்துகிறவனும் உங்களுடைய கடவுளேயாகும், குழப்பங்களுக்கெல்லாம் அவரே காரணமாயிருக்கிறார். மனிதனிலும் அவரே இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால் மனிதன் பாவம் செய்யும் போதும் அவரே அவனை ஆட்டுகிறார் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். கடவுள் எங்கும் இருப்பாயிருந்தால் அவர் என்னிடத்திலும் இருக்கிறார்; என்னோடு அவரும் அசைகிறார், நான் சபிக்கப்படும்போது அவரும் சபிக்கப்படுகிறார்; கடவுள் இருப்பதை நான் ஆட்சேபிக்கும்போது அவரும் சேர்ந்து ஆட்சேபிக்கிறார். கடவுளை நான் கோபப்படுத்தும்போது அவரும் சேர்ந்து கோபப்படுத்துகிறார்.

ஓ! மதாபிமானிகளே! ஆஸ்திகர்களே! கடவுளைப்பற்றி பேசும்போது, நீங்கள் சொல்வது இன்னது என்பது உங்களுக்கே தெரியவில்லை யென்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

ஒழுக்கம்.

(இ. வெ. ராமசாமி.)

உலகில் கற்பு, காதல் என்பனபோன்ற வார்த்தைகள் எப்படி பெண்மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும் பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழ பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமேகிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம், என்பனவெல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது குழந்தைகளைப் பயமுறுத்த பெரியவர்கள் "பூச்சாண்டி" "பூச்சாண்டி" என்பதுபோல் இவை எளியோரையும் பாமர மக்களையும், வலுத்தவர்களும், தந்திரக்காரர்களும் ஏமாற்றச்செய்த ஒரு பெரும் சூழ்ச்சியேயாகும்.

எப்படி குழந்தைப்பருவம் உள்ளவரை பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அதுபோலவேதான் அறிவும், சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத்தீரவேண்டியிருக்கிறது.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்கானமான காரியம் என்பனவெல்லாம் அனைவகளைச் செய்கிற ஆட்களின் வலிமையையும், அறிவையும்கொண்டு மதிக்கப்படுகிறதேயல்லாமல், வேறும் காரியத்தைப்பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை.

சாதாரணமாக உலகில் "விபசாரம்" "பொய்" "களவு" "ஏமாற்றம்" முதலிய காரியங்களை ஒழுக்கங்கெட்ட காரியங்கள் என்று சொல்லப்படுகிறதென்றாலும், இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது எதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இதுவரையில் உலகத்தில் காணமுடியவே இல்லை.

ஒரு சமயம் நமது கண்ணுக்குத் தென்படவில்லை என்று சொல்லுவதானால் அப்படிச்சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப்பற்றியே நினைத்துப்பார்த்து தங்களுடைய சிறு பிராயம் முதல் இன்றையவரையில் உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட "ஒழுக்கங்கெட்ட" காரியங்கள் என்பனவுகளில் எதையாவதொன்றை மனோவாக்குகாயங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா, அல்லது செய்யாமல் இருக்கின்றார்களா என்று நினைத்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும். (N. B. மற்றும் தங்களுடைய சுற்றத்தார் நண்பர், சுற்றிலுள்ள அறிமுகமான ஜனங்கள் என்றாய்த்தெரிந்த அந்நியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இருவித முடிவைக் கண்டுகொண்ட பிறகு உலகத்தை நினைத்துப் பாருங்கள்).

மற்றும் உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்து வருகிற தொழில்களில் முக்கியமானவைகளாகக் காணப்படுவது விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலை மாதர் தொழில் ஆகியவைகள் முதல், குருத்துவம், சன்னியாசம், துறைத்தனம், தேசீயம், ஈறாகவுள்ள அனேகதுறைகள் ஆகும். இவற்றின்மூலமே மக்கள் பெரும்பாலும்வாழுகின்றார்கள் என்பதை நாம்பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இந்த மக்களில் யாராவது ஒருவர் ஒழுக்கமாக நடந்துகொள்ளுவதை நாம் பார்க்கின்றோமா? ஒழுக்கம் என்றால் என்ன? அது எது என்கின்ற விஷயத்தில் நாம்இப்போது பிரவேசிக்கவில்லை. அதற்கு இந்த வியாசத்தில் இடம் வைக்கவுமில்லை. மற்றப்படி நாம் ஒழுக்கம் என்பதாக உலகவழக்கில் எதை எடுத்துக்கொண்டு பேசுகின்றோமோ, மேற்கண்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தந்த துறைக்கும் எதை யெதை ஒழுக்கம் என்று அவர்களாகவே சொல்லிக்கொள்ளுகிறார்களோ அதையும், அவரவர்கள் மற்றவர்களைப்பார்த்து எதை யெதை ஒழுக்கம் கெட்ட காரியம் என்று சொல்லுகிறார்களோ அதையும் மாத்திரமே இங்கு ஒழுக்கம் என்பதாக வைத்துக்கொண்டு யாரிடமாவது இந்த ஒழுக்கத்தைக் கண்டுபிடிக்க முடிகின்றதா என்றுதான் கேட்கின்றோம்.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலையிலேயே எஜமான்

செய்துவிட்டு வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லுகிறான்.

ஒரு குமாஸ்தா செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை மேல் அதிகாரி அந்தக் குமாஸ்தா முன்னிலையிலேயே பல தடவை செய்துவிட்டு குமாஸ்தாவை ஒழுக்கங்கெட்டவன் என்று கூறுகிறான். (N. B. ஒரு மகன் செய்யும் ஒழுக்கங் கெட்ட காரியத்தை தகப்பன் செய்துவிட்டு மகனை ஒழுக்கங் கெட்டவன் என்று சொல்லுகிறான்).

இதுபோலவே, எல்லாத்தொழில் துறையிலுமுள்ள மக்களும் அவரவர்கள் வாழ் காட்களில் ஒழுக்கமின்மையாக நடந்து கொண்டே மற்றவர்களை ஒழுக்கமின்மக்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவை நாம் குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மாத்திரம் இருப்பதாய்ச் சொல்ல வரவில்லை. "ஒழுக்கமாய்" மக்கள் யாராலும் நடக்கமுடியாது என்றும், ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும், ஒழுக்கம் என்று சொல்லி வருவதெல்லாம் எளியோரையும் பாமர மக்களையும் அடிமைத்தனத்தில் இருத்திவரப் பயன்படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள சமதர்மத்துக்கு பயன்படக்கூடியது அல்லவென்றும் சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகிறோம்.

உண்மையிலேயே ஒழுக்க ஈனம் என்பது ஒன்று உண்டென்றும், அது திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய குணங்கள்தான் என்றும் சொல்லுவதாய் இருந்தால் அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய் குடிகொண்டு இருக்கும் இடங்கள், அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

மனிதர்களுக்கு துன்பமிழைத்து அவர்களது அமரிக்கையைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்துவாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களே யாகும்.

இது அந்தந்த துறையைக் கைக்கொண்ட ஆட்களை மாத்திரமல்லாமல், அந்தத் துறைகளுக்கே ரத்தமும், சதையும், எலும்பும் போலக் கலந்திருக்கும் காரியங்களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக் கண்டு எந்த மகனும் அருவருப்

ஹிந்தி ஆராய்ச்சி.

இந்தியா வடக்கே இமயமலையாலும் மற்ற மூக்கால் பாகங்கள் கடலாலும் சூழப்பட்டு நாவலந்தீவனப் பெயரி டப் பட்டிருக்கிறது.

கிறிஸ்துவிற்கு 2000 வருடங்களுக்கு முன் ஆரியர்கள் திபேத், மங்கோலியா முதலிய இடங்களிலிருந்து ஹிமயத்தைக் கடந்து இந்தியாவுக்கு வந்தார்கள்.

இந்தியா, ஹிந்து என்னும் வார்த்தைக்கே என்ன அர்த்தம் மென்று ஆராய்வோமானால் அடிமைநாடு, அடிமைகள், அடிமை பாஷையென்று பொருள்பட அக்காலத்திய பாரஸீகர் களால் அழைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியில் தெரிகிறது.

ஹிந்தியின் ஆரம்பம்.

ஹிந்தி பாஷையின் ஆரம்பத்தை தெரிந்து கொள்வது

படுவதே யில்லை. இவர்களிடத்தில் மக்கள் வெறுப்புக் காட்டுவதுமில்லை. அதற்குப்பதிலாக, இந்தக் கூட்டத்தா ருக்குத் தான் காட்டிலே மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும், இருந்து வருகின்றது. மனித சமூகத்திற்கு எலும்புருக்கி வியாதிபோன்ற இந்தக் கூட்டம் மக்களிடம் ஆதிக்கம் செலுத்திவருவது என்பது மக்களின் அறிவீனத்தையும் பல மற்ற தன்மையையும் காட்டுவதல்லாமல் வேறில்லை.

வாழ்க்கைத் துறையின் ஒழுக்கம்தான் இம்மாதிரி இருக் கின்றதென்றால் மற்றபடி, பக்தி பரமார்த்திகம் ஆத்மார்த் தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதை காணமுடிகின்றதா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நம்து அபிப்பிராயம்.

அவசியம். அதற்கு பாஷாவாரியாக அமைப்பும் பூமியின் பிரிவும் தெரியவேண்டும்.

நமது இந்தியா ஒரு சிறிய ராஜ்யம் அல்ல, அது பிரிட்டிஷ் தீவைவிட 80மடங்கு அதிகநிலப் பரப்பைக் கொண்ட ஒரு கண்டம்.

உலகிலேயே உள்ள கண்டங்களில் 3 வதாக ஜனத்தொகையுள்ளது. இந்தியா சுமார் 832 பாஷைகளைக் கொண்டது. இந்தியகாட்டில் முக்கியபாஷைகளை 3 விதமாக பாஷை ஆராய்ச்சியாளர்களால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:- திராவிடம், ஆரியம், அஸ்துரிக் அல்லது நாகம்.

திராவிட பாஷை.

திராவிட பாஷையே ஆதியில் எழுத்துக்கள் உடையது. ஓங்காரவடிவமேபிரணவம், பத்துமாதங்கள் கொண்டகருவுக்கு பத்து உயிரெழுத்துகளே ஆதாரமாகி அதற்கு ஓங்காரம் பிரணவமாகி ஓங்காரத்தினின்று அகர உகராதிகள் பிரிந்து அம் ஆகி பின்னர் மெய்யாகியஉடலில் சேர்ந்ததால் உயிர் மெய்யெனவும் ஆகியது என்பதிலிருந்து அறியவும்.

திராவிடரே அக்காலத்தில் இமயம்வரை சென்று வசித்தனரென்றும் சிந்து மாகாணத்தில் இப்பொழுது தோண்டி எடுக்கப்படும் சாசனங்களிலும், தமிழ் சுவடிகளில் காணப்படுவதிலிருந்தும் தமிழ், 7000 வருடங்களுக்கு முன்பே இருந்ததென ஆராய்ச்சியாளரால் கூறப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

தொல்காப்பிய காலம்.

பாஷைகளின் கணக்கெடுத்து அப்பாஷைகள் எதினின்று கால் முதல் ஈறு எனக்காண ஆங்கில அரசாங்கத்தாரால் பாஷா ஆராய்ச்சி ஸ்தாபனம் ஒன்று உண்டாக்கி பாஷா விற்பன்னர்களையும், புராதனப் பொருள் ஆராய்ச்சி நிபுணர்களையும் கொண்டு சர். ஜார்ஜ் காமிலன் என்பவரின் தலைமையின் கீழ் ஆராய்ச்சி செய்யப்பட்டதிலிருந்து அபூர்வமான இரகசியங்கள் சில வெளிப்பட்டிருக்கின்றன.

தொல்காப்பியம் என்ற நூல் 12,000 வருடங்களுக்கு முன்னுள்ளது. இதுசங்க காலத்திற்கு அதாவது தலைச்சங்க காலத்திற்கு முந்தியது. ஆதலின் ஆரியமும், ஆரியபாஷையும்

திராவிடத்திலிருந்துதான் பிறந்திருக்கிறது. நிற்க, ஹிந்திக்கு சுயமான லிபி இல்லை. இதுநாக பாஷை, பாலி, அல்லதுபெர்ஷியா, அரபி, உருது, லிபியினின்றுதான் எழுதப்படுகிறது.

ஆதிகிரந்தங்கள்.

ஹிந்தி என்பது இந்துஸ்தானி பாஷைக்கும், சமஸ்கிருத பாஷைக்கும் தொந்திக்கப்பட்டு அது கடைமுறையில் மாறிக் கொண்டிருக்கிறது. இன்னும் கிரந்தங்கள் பாலி என்ற திராவிட சமஸ்கிருத பாஷையில்தான் இருக்கிறது ஷ, ஹ, ஜ்ஞ, க்ஷ, என்பன போன்ற சில எழுத்துக்கள் பாரசீக எழுத்துக்களாகும்.

ஹர்ர், ஹர்ர என்ற உள் சப்தமிட்டபாஷைகள் அரபியிலும் மாங்கோலியத்திலும், சீனத்திலும் உண்டு.

இதிலிருந்து மங்கோலிபாவிலிருந்தும். திபேத்திலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் வந்தவர்கள் தங்கள் பாஷைகளைக் கதம்பமாக்கிதிராவிடத்தில் எழுத்துக்கள் சேர்த்து எழுத்துஉண்டாக்கிய நவீன கதம்பமெனலாம்.

தண்ணீருக்குள் இமயம்.

நாகார்ஜுனென்ற அரசனால்தான் நாகாபாஷைபெரும்பாலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. தெற்கே பரவும்பொதுவட்ட எழுத்துக்களாலும் வடக்கே நாகரத்திலும், பாரசீக அரபியிலும், எழுதுவதிலிருந்து இதுதெரிகிறது.

இன்னும் வடநாடு அதாவது வேங்கடத்திற்குவடக்கே கண்ணீர் தேக்கமாயும்இம்யமலையே தண்ணீருக்குள் அழ்ந்து கிடந்ததென்பதற்கு போதிய அத்தாட்சிகளும் உள. தென்னாடு திராவிடம், ஆஸ்திரேலியா, மலாயா, பாலித்தீவு வரையிலும், தமிழ் பாஷை, எகிப்து, பாபிலோன், ஜெருசலம் வரையிலும் பரவி இருந்ததென்பதற்கு அத்தாட்சிகளும், சாஸ்திரங்களும் இருக்கின்றன.

பூகம்பத்தின் காரணம்.

ஆதலின் வடநாடு புதியது. பூகோள அமைப்பிலும், கனத்திலும் தென்னாட்டைவிட குறைந்தது. இவ்வுண்ணமலை வடநாடு அதாவது சிந்து, கங்கை, சமவெளி பிரதேசம்

காடுல் குவெட்டா, முதலிய விடங்களில் அடிக்கடி பூகம்ப அதிர்ச்சிகள் உண்டாவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் தென்னாடாகிய தமிழ் நாடு, திராவிட நாடு ஒரு காலமும் அதிர்ச்சியடையாது. நிற்க, விந்தியமலைக்கு மேலுள்ள வடநாட்டை பாஷாவாரியாகவும் தேச ஆசாரவாரியாகவும் பிரித்தல் கலம். அது 17 பாகங்களாகிறது. அதில் பாலை வனங்கள் மூன்றிலொரு பங்கும், மலைகள் ஆறிலொன்றுமாக எடுபட்டுப் போகிறது.

ஆரியர் குடியேறின இடம்.

வடஇமயம், தென் இமயம், கீழ் இமயம், கங்கை பள்ளத்தாக்கு, சிந்து பள்ளத் தாக்கு, பிரம புத்திரா பள்ளத் தாக்கு, நர்மதை, யமுனை தீரம், இவைகள்தான் ஆரியர் ஆதியில் குடியேறிய பாகம்.

கங்கைக்குத் தெற்குபாகம் யமுனைக்கு கிழக்குபாகம் பஞ்சாதிகள தீரத்திற்தும், பஞ்சாலத்திற்தும் (punjab) இது சோண் நதிவரைக்கும் பாவுகிறது.

நர்மதை, தபதி, ஹரந்தி தீரங்களில் திராவிட ஆரியர் இருந்தனர். கோதாவரி, கிருஷ்ணா நதிதீரத்தில் ஆந்திரரும், அதற்கு தெற்கே மற்றைய திராவிடரும் இருந்திருக்கின்றனர். கிழக்கே பர்மா, மலாயா, தெற்கே சிங்களம் ஆரிய அரசனாகிய நாகரா ஜனால் பரப்பப்பட்ட பாலி எழுத்துக்கள் கொண்ட ஆரிய பாஷையிலேயே பேசுகின்றனர்.

தெட்சிண ஜனத்தொகை.

வடக்கே இருக்கும் ஜனத்தொகையை விட தெற்கேதான் அதிகம். தெட்சிணம் தான் திராவிடரின் ஸ்தானமாகும். வடக்கே இமயத்தைச் சேர்ந்த காஷ்மீரம், நேபாளம், மைதிலியம், குமயூன் வடமேற்கு மாகாணம், தார்டம், காந்தாரம் கோசல்யம், போலார், காஷ்கார், கபீசா, பாமீர், பாதாக்ஷான், ஹிந்து குஷ் என தேச பாஷா ராஜ்பங்களும் உள. அம்மாதிரியே தட்சணத்தில் மஹாராஷ்ட்ர, ஆந்திர, சோழ, பாண்டிய, கேரள, கொங்கண, கொச்சி, குடகு, துளு, கன்னட, தோட தேசங்களும் இருக்கின்றன.

மூன்று பாதங்கள்.

வங்கத்திலே பீகார், ஒரிஸா, வங்காள, நாகா வங்காள முதலிய 60 பிரிவுகள் இருக்கின்றன. மனு ஸ்மிருதிப்படி ஜன பாதம், மகாபாதம், மகாஜன பாதம் என்கிறபடி பார்க்கையில் குருக்ஷேத்திரம், மத்தியம், பாஞ்சாலம், சூரசேனம் என்பன ஒரு ஜன பாதம்.

இவ்வைந்துக்கும் ஐந்து முக்கிய பாஷைகளும். ஒவ்வொரு முக்கிய பாஷைக்கு அநேக சிறு பாஷைகளும் இருந்திருக்கின்றன.

பங்காரு, மீவாதி, அகீர்வாதி, கரிபோலி கானோனி பிரஜ பாகா, பந்தேலி என்ற மத்திய மாகாணங்களில் பேசப்படும் பாஷையே பல பெரும் பாஷைகளிலிருந்து தொகுக்கப்பட்டிருக்கும் ஹிந்தியாகும்.

சீன அறிஞர் கூறுவது.

கி. பி. 900-ம் வருஷம் ராஜசேகரன் என்ற ஓர் அறிஞனால் ஹிந்தி பாஷை எழுதப்பட்டதென்றும் அதை நாகரத்திலிருந்து எடுத்து எழுதினான் என்றும் சொல்லப்படுகிறது. அப்பொழுது ஸ்தலங்கள் 5 எனவும் ஹுவூந்த் ஸங் என்ற சீனர் இந்தியாவின்சிறப்பைபற்றி எழுதிய புத்தகத்தில்எழுதியுள்ளார்.

மத்திய மண்டலம் அல்லது மத்திய தேசத்திலேயே ஹிந்தி பேசப்படுகிறது. இத் தேசமானது வங்காளம், அஸ்ஸாம், குஜராத், சிந்து, பஞ்சாப், பீகார், சாந்தனல் பாகானால், ராஜபுதனம், முதலிய மாகாணங்களைத்தவிர்த்தும் விந்திய மலைக்கு தெற்கு பாகத்தைக் தவிர்த்தும் உள்ளதுதான் ஹிந்தி பாஷை பேசப்படும் ராஜ்யம் இது மத்தியமா காணம்—ஆக்ராவில் ஒரு பகுதி அயோத்தியில் ஒரு பகுதியும் கொண்டது.

பாஷா வித்தியாசங்கள்.

ஹிந்தி எத்தனை போல் பேசப்படுகிறது என்றால் அது சொல்வது துர்லபம். ஷை ராஜ்யங்களில் ஹிந்தியைத்தவிர பிகாரி, போஜ்புரி, மாக்கி மைதிலி என்பவை கலந்து இருக்கின்றன.

போஜ்புரிஎன்றது ஆகிமகதம், மல்லாடர்ஹாட் முன்கீ பகல்புரி என்ற ராஜ்யங்களில் வழங்கிவருவது. இதற்கு கயா மாகிஎன்னும் புனைபெயருண்டு ஆயினும்ஹிந்தி என்றழைக்கப்படும் பெயர்களில் ராஜஸ்தானி என்பதையும் இப்பொழுது சேர்க்கிறார்கள், ஆனால் பாஷா விற்பன்னர் அதை மறுக்கின்றார்கள்.

ஆதலில் பீகார்தவிர்த்து விந்திய மலைக்கு வடக்கே இமயத்திற்கு தெற்கே முன்பு சொன்ன ராஜ்பங்களே மத்திய மாகாணம் எனலாம். இதில் வ—இந்தி, பந்தேலி, கரீபோலி, பிரஜாபாகா கனோஜி எனவும் இவை ஒவ்வொன்றுக்கும் விசித்தியாசப்பட்டிருக்கின்றன.

பல உட்பிரிவுகள்.

மத்திய ஹிந்தி, அவதி, பாகேலி, சதீஸ்காரி என மூன்று. இவற்றில் மேவாதி, அஹீர்வாதிஎன்பது இருபிரிவு. இதில் பிரஜா பாசா, பங்காரு என உட்பிரிவுகளுள. இன்னும் பஞ்சாபி, குஜராத்தி, பாகாரி, என்று அந் நாடுகளில் குர்முகி அல்லது புஷ்டு பாஷை ஹிந்தி, கரீபோலிபின் முக்கிய அப்ஸமெனவும், அறிஞர்கள் கூறுவர். இது மீரத், ரோகில் கண்டு காயுன் நூகிபாஷையாகவும், அம்பலா என்னு மிடத்திலும் பெருத்திருக்கிறது.

அலகாபாத்தில் பேசப்படுவது அவதிஹிந்தி. இதற்கும்கரீபோலிக்கும் நிறைய விசித்தியாசங்கள்உள. இவ்விதக குழப்பங்கள் இருப்பதாலேயே ராஜசேகரன் அந்தர்வதி யென இதற்குப் பெயரிட்டான். இது உபயோகிக்கும் இடங்கள். வினாசன், மாயாகை, கங்கை தெற்கு, யமுனைக்கு வடக்கு பாகம் முதலியன.

இது தவிர கிழக்கே பெங்காளி, அச்சாமி, உரியா, தெலுங்கு, உருது, கன்னடம், தமிழ், துளுவம், மலையாளம், குடகு என்ற கனத்த பாஷைகளும் உள.

6 முக்கிய பாஷைகள்.

தட்சிணத்தில் அதாவது டெக்கான் பீடபூமியில் வழங்கும் பாஷைகளை 6 முக்கிய பாஷைகள் என்று பிரிக்கலாம். ஆனால் வடநாட்டில் அவ்வாறு பிரிக்க முடியாதென்பதே எனது துணிபு. ஆகவே ஒரு நாட்டிற்குப் பொது பாஷை அவசியம். ஆனால் அது உலக மறிந்ததாகவும், பெரும் சிக்கலில்லாமலும், சாஸ்திர, விஞ்ஞான தாவா, ஐங்கம, சூஸ்திர ஆராய்ச்சிகளுக்கு ஏதுவானதாகவும் இருத்தல் அவசியம்.

மேற்கூறியவைகள் பிரபல ஆராய்ச்சியாளர்களாகிய ஸர். ஜார்ஜ் காரிஸன், போப், மாக்ஸ் முல்லர் என்பவர்களின் ஆராய்ச்சியிலிருந்தும், காசி வித்தியாபீட புரோபஸர் பண்டிட் ஜயசந்திரகாங் வித்தியாலங்கார், சுவாமி விபுலானந்தர், ஹான் சந்திர சுக்லதார், ராதா குமார் முகர்ஜி, செங்கசாமி ஐயங்கார் எனப் பெரிய மேதாவிகளால் எழுதிய ஆராய்ச்சி புத்தகங்களிலிருந்தும் தொகுக்கப்பெற்றதாகும். (த—மு)

தந்திர வித்தைகள்

(M. சிங்காரவேலு)

பலகாலமாக மெஸ்மரிசத்துடன் சம்பந்தப்படுத்தப் பட்டு வந்த போலி ஞானங்களில் ஒன்றாகிய டெலிபதி (Telepathy) இன்னதென்பதையும், சுருங்க விளக்கினோம். இந்த டெலிபதி விஷயமாக சம்பந்தப்பட்டதான சில போலி ஞானங்களைக் குறிப்பிட்டோம். இவைகளில் (1) சூலேர் வாயன்ஸ் (Clairvoyance) அதாவது தூரதிருஷ்டி (Distant-vision) என்ற வித்தையும் இதனோடு சம்பந்தப்பட்ட (2) புதையலைக் கண்டுபிடிக்கும் வித்தையும் (Finding the Treasure Trove) (3) தண்ணீரைக் கண்டறிதல் என்ற வித்தையும (Water Divining) (4) மைபோட்டுப் பார்த்தல் (Crystal gazing) என்ற வித்தையும் முக்கியமானவை. தூரத்தில் நடக்கும் சம்பவங்கள் சாதாரணக் கண்கள் மூலமாக அல்லாமல் ஏதோ ஓர் ஞானக்கண்களால் பார்ப்பது என்ற வித்தையை சிலேர்வாயன்ஸ் (Clairvoyance) என்றும் சொல்லுகிறார்கள். இந்த வித்தைகளில் ஏதோ சிறு உண்மை இருந்தபோதிலும், அந்த சம்பவங்களுக்கு மாயவாதிகள் (Spiritualists) கூறும் காரணங்களால் நிகழ்வதென்பது, நம்பக்கூடியதல்ல என்பதை சற்று விளக்குவோம்.

அக்கல்டிஸ்ட் (Occultists) என்று வழங்கும் மாயவாதிகள் மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு (Phenamena) மறைவான காரணங்களை (Mystic Causes) குறிக்கின்றார்கள். தூரத்தில் நடக்கும் சம்பவங்களை, மயக்கத்திலுள்ள ஒருவன் தெரிவிப்பானேயாகில், அது அவனுடைய சூட்சுமக்கண்ணால் தெரிந்து சொல்லுகின்றானென்று கூறுகின்றார்கள். புதைந்து கிடக்கும் பணத்தைக்காட்டினால் அது விநாயகர் வசியத்தால் சித்திக்கின்றது என்று வாதிக்கின்றார்கள்—அல்லது, கண்ணுக்குத் தெரியாத நீர்ப்பாங்கை கண்டுபிடித்தால், கண்டுபிடிக்கின்றவனுக்கு ஓர் சூட்சுமசக்தி உண்டென்கின்றார்கள். மை போட்டுப் பார்த்தால் அணுமார் அருளால் அதில் கண்களுக்குத் தெரியாத விஷயங்களும், வஸ்துக்களும் தெரி

கின்றது என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இந்த தந்திர முங்களை மெஞ்ஞான முறைப்படி விசாரித்தறிவோமாயின், மாயாவாதிகள் கூறும் காரணங்களால் உண்டாகவில்லை என்றும், சாதாரணமாகவே அத்தோற்றங்களின் உண்மையை எளிதில் அறிந்து கொள்ளக்கூடுமென்பதையும் எடுத்துக் காட்டுவோம்.

முக்கியமாக இந்த விசாரணையில் நாம் அறியவேண்டிய விஷயங்களென்னவெனில், மெஞ்ஞான முறைப்படி விளக்கும் மூக்கீகாட்பாடுகளாகிய ஆன்மா, மறுஜென்மம், உயிர், கடவுள், முதலிய வெறுஞ்சொற்களில் இருந்து வந்த நம்பிக்கை குறைய நேரிடவும், இச்சொற்களை ஆதரிக்கும் மாயாவாதிகள் தங்கள் மாயாவாதத்தை (Spiritualism) நம்பிவிடுகின்றனர். தேய்ந்து வரும் மதங்களை இந்த மாயாவித்தைகளாவது கொண்டாகிலும் ரட்சிக்கலாமா? என்ற நோக்கமே இந்த வித்தைகளை ஆதரித்துப்பேசுவதற்கு முகாந்தரமாகவுள்ளதென அறிக. ஆனால் "சுடுகாட்டுக்குப் போன பிணம் திருமபியவாது" என்ற பழது மொழிபோல் செத்து நம் சொற்களாகிய கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், பேய், பிசாசு, திரும்பவும் மனிதர் உள்ளத்தில் இந்த மாயாவித்தைகளாய் உதிக்கும் என்பது பகற்கனவேயாகும்.

தூரதிருஷ்டி (Clairvoyance) கண்களுக்கு மறைபுள்ளவஸ்துக்களையாகிலும், அல்லது காதுகளுக்குக் கேட்காத சொற்களையாகிலும், கண்களால் பாராமலும், காதுகளால் கேட்காமலும் தெரிந்து கூறுவதை தூரதிருஷ்டி ஞானமென்பர். ஒரு பெட்டியில் தூரதிருஷ்டிக்காரனுக்குத் தெரியாமல் பொருள்களை வைத்து அந்தப் பெட்டியை காட்டினால் அவன் அதிலுள்ள பொருள்களை பெட்டியைத் திறந்து பார்க்காமலே தெரிவிக்கின்றானாம். அல்லது எதையாகிலும் கிணற்றுக்குள்ளென்று அவனிடம் சென்று அவனைக்கேட்டால் சிலசமயத்து சொற்களை தெரிவிக்கின்றானாம். இந்தசமயங்களை சாதாரணமான தூரதிருஷ்டி என்று வழங்குகிறார்கள். இது அருகாமையில் நடக்கும் தோற்றங்கள் எனத் தூரத்தில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்வதும் தூரதிருஷ்டி சக்தியால் என்றும் கூறுகிறார்கள். இத்தியாதி சம்பவங்கள் உண்மையா என்று விசாரிக்கவேண்டும். மாயாவித்தையில் நம்பிக்கையுள்ள Sir William Crookes, Sir Oliwer Lodge, Sir william Barrett முதலியோர் இதைத் தோற்றங்களில் மோசம் நடந்திருந்தபோதிலும், சில தோற்றங்

றங்களுக்குக் காரணம் தெரியாதபடியால் நமக்குத் தெரியாத சக்தியால்தான் அவை நடந்திருக்க வேண்டுமென்று கூறுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மை மெஞ்ஞானிகள் இந்த சம்பவங்கள் யாவும் தந்திர வித்தை என்றே (Tricks) மதிக்கின்றார்கள் சில சம்பவங்களில் தந்திரம்தெரியாவிடில் தந்திரக்காரனுடைய சாமார்த்தியத்தால் (Conjurcus Tricks) நமக்கு அவன் செய்யும் தந்திரம் தெரியாமல் இருக்கின்றதே யொழிய வேதோ அபூர்வ சக்தி (Abnormal sight) யால் தெரிந்து சொல்வதாக எண்ண எந்தவித முகாந்திரமும் இல்லை என்பார்கள். இந்தத் தந்திரத்தை பரீட்சித்தவரை, பலதோற்றங்களின் தந்திரம் வெளிப்பட்டே வருகிறது. இந்த மோசம் கோர்ட்டிலும் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒரு பெரிய மனுஷி முன்பாக பெட்டியில் இறந்து போனவருடைய மோதிரம், கண்ணாடி இன்னும் பல வஸ்துக்களை போட்டு மூடிவைக்கப்பட்டது. அந்த அம்மை பெட்டியினுள் வைத்திருக்கும் வஸ்துக்களின் விபரங்களை தெரிவித்தனளாம். ஆனால் சில நாள் கழித்து இதன் ரகசியம் வெளிப்பட்டது. இந்த அம்மையுடன் கூட வந்த தந்திரக்காரன் யாவருக்கும் முன்பாக செய்த தந்திரத்தால் நிகழ்ந்ததாகத் தெரியவந்தது. அவன் காட்டிய பெட்டியை நழுவச் செய்து இன்னொரு பெட்டியை அந்த இடத்தில் வைத்துவிட்டு உள்ளே கொண்டுபோன பெட்டியைத் திறந்து அதிலிருக்கும் சாமான்கள் விபரங்களை வெளியிலிருக்கும் அம்மைக்கு சைகை மூலமாகத்தெரிவிக்க, அந்தஅம்மை சபையில் மெதுவாக அந்தந்த வஸ்துக்களை தானே அறிந்து சொல்வது போல் தெரிவித்தனளாம். இந்த வித்தையின் சூழ்ச்சி தெரிந்தும் முன்பும் சில மெஞ்ஞானிகள் இதை விந்தை என்றே கருதி வந்தார்கள். ஆனால் விசாரித்த பிறகு நேர்ந்த மோசத்தை அறிந்தும் இந்த மெஞ்ஞானிகளுக்கு (Scientists) அறிவு உண்டானதோ நமக்குத் தெரியாது. ஏனெனில் சில மெஞ்ஞானிகளுக்கு மதப்பற்றால் மதமயக்கம் (Mystery) அவர்களை விட்ட பாடில்லை என்று தெரியவருகிறது. எல்லா வாசனைகளிலும் மதவாசனை புராதீனமானது. இந்த வாசனைப் பற்றால், மெஞ்ஞானிகளும் சில விஷயங்களில் ஏமாந்து போகின்றனர். மதப்பற்று எந்தக் காலத்தில் மாந்தரை விட்டு ஒழிகின்றதோ அந்தக் காலத்தில் தான் உலகிலுள்ள பித்தலாட்டங்களும் ஒழியுமென அறிக.

கும்பகோணத்தருகிலுள்ள வலங்கைமான் கிராமத்தில் ஒரு தூரதிருஷ்டியோன் (Clairvoyant) இருப்பதாகவும்,

அவன் நினைத்ததை சொல்வதாகவும், அதற்கு ரூபாய் ஐந்து கொடுக்கவேண்டுமென்றும் கேள்வி. மற்ற தந்திரங்களைப் போல் இதுவும் ஓர் தந்திர மென்றே கூறல் வேண்டும். இவன் நாம் நினைத்ததைச் சொல்வதற்கு பல சூழ்ச்சிக ளுண்டு. அவையாவன:— அவன் தன்னை மாயத்தூக்கத் தில் வைத்துகொள்ளுகிறான். அதனால் வெளிச்சத்தும், சந்தடியும், தனக்கு கேட்பதில்லை. ஆனால் நமது செய்கை களையும், உதடு அசைதலையும், மெதுவாக பேசுவதையும் அவன் கவனிக்கிறான். நாம் எண்ணிய எண்ணத்தை நாம் மெதுவாகப் பேசுகிறோம், (Behaviourists) அதாவது நடத்தை மெஞ்ஞானிகள் சொல்வதுபோல் நாம் மெதுவாகப் பேசுவதே நமது எண்ணமான படியால் அந்தப்பேச்சை தூர திருஷ்டியோன் கேட்கக்கூடும். அல்லது நமது உதட்டின் அசைவாலும் அவன் நமது "எண்ணத்தை" தெரிந்து கொள்ளக்கூடும். இத்தியாதி முகாந்திரங்களால் தெரிந்து சொல்கின்றான் என்ற உண்மையை விட்டுவிட்டு நாம் நினைத் ததை கணேசர் அருளால் தெரிந்து சொல்கிறான் என் றும் அல்லது மாயசக்தியால் (Occult Faculty) தெரிந்து சொல்லுகின்றான் என்றும் பிதற்றுகின்றார்கள். உண்மை மையில் சாதாரண சைகைகளைக்கொண்டே நமது "எண் ணங்களை"த் தெரிந்து சொல்கின்றார்கள்.

இதன் சம்பந்தமாக தெய்வமாடி, நமது உள்ளத்தி லுள்ளவைகளை சொல்லும் வித்தையை கவனிக்கலாம். தெய்வ மாடுகின்றவராகிலும் அல்லது (Medium) மாய்கை தூக்கத் திலுள்ளவளும் (Hypnotised Men or Women) தாறு மாறாய்க் கேள்விகளைக்கேட்கின்றார்கள். அந்தக்கேள்விகள் நமக்குத் தாறுமாறாகக் காணப்படினும் மாயவாதிக்கு அக் கேளவிகள் அனுகூலமானவைகளே இந்தக் கேள்விகளைக் கேட்கும்போதே தலையை அசைக்கின்றோம். அந்த கேள்வி களுக்கு விடையை நாம் அறியாமலே உளறுகின்றோம். இதனை நுட்பமாக அறிந்துகொண்டுவரும் மாயவாதி, தெய்வ ஆவேசத்தால் தான் நமது உள்ளத்தில் உள்ள கோரிக்கை களைத் தெரிந்து சொல்வதுபோல் நடிக்கிறான். இதுதான் இத்தியாதி தூரதிருஷ்டி சம்பவங்களில்நடந்துவரும் தந்திரம். இதனை அறியாது அம்மன் சொன்னாள், விநாயகர் அருள், தெய்வ ஆவேசம், செத்தவன்ஆன்மா தெரிவித்தது (Mystic or Occult Powers) மறைவான சக்தி, (Abnormal Vision) அபூர்வமான பார்வை, என்று மூட மக்கள் பிதற்று

கின்றார்கள். இவர்களைப்போலவே மதப்பற்றால் கிலவிஞ்ஞானிகளும் உளறுகின்றார்கள்.

இதன் விஷயமாக இன்னொரு பித்தலாட்டமும் செய்கின்றார்கள். இவர்கள் தங்களைக் காணவருகின்றவர்களின் வருத்தாந்தங்களை தங்கள் ஆட்களைக்கொண்டு விசாரிக்கின்றார்கள். இதனைத் தெரிந்து கொண்டு தாங்களே மாயசக்தியால் தெரிந்துகொள்வதுபோல் நடிக்கின்றார்கள். இவர்கள் சொல்வதில் எத்தனையோ பிழைகள் (Mistakes) இருக்கின்றன. ஆனால் நமது அவசரத்தினால், அதைப்பிடித்துக்கொண்டு நமக்கு வேண்டிய அனுகூலமானவற்றை மாத்திரம் எடுத்துக்கொள்கின்றோம். இந்த மனப்பழக்கத்தைக் (Mental Fallacy) கடந்து உள்ளதை உள்ளபடி அறிய வேண்டுமென்பதே மறுக்கு (Occultists, Sorcerers, Spiritualists, Mediums, Telepathists) செய்யுட்களின் கருத்தினை விளங்கும். சென்ற சில வருடங்களுக்கு முன்பு இந்த பிரபல மாந்திரீகனாகிய ஹவுடினி (Houdini) என்பவன் செய்த மாயவித்தைகளில் சிலவற்றை இவரால் அறியக் கூடவில்லை என்றால் சாமான்ய மக்களும், மதப்பற்றுடையவர்களும் மாய வித்தைகளில் நம்பிக்கை வைப்பது ஆச்சரியமோ? இந்த மாய வித்தைகளில் கூறியுள்ள சம்பவங்களை சிலர் சென்னை அடையாறிலுள்ள பிரம்மஞானக் கூட்டத்தில் (Theosophical Society) நடந்து வந்ததை நமது தோழர்கள் அறிவார்கள். இவைகள் எல்லாம் மோசமென்று சிலவருஷங்களுக்கு முன்வி ளம்பரப் படுத்தப்பட்டிருப்பதை Fraud of Theosophy by Maskelyne, Isis, very much unveiled by Garret என்ற சிறு புத்தகங்களை வாசித்தறியலாம்.

2. புதையலைக் கண்டுபிடித்தல்:-புதைந்துகிடக்கும் திரவியங்களை ஞானக்கண்ணால் கண்டு பிடிப்பதென்ற பித்தலாட்டத்தை நம்பி அதேகர் மோசம் போய் இருக்கின்றார்கள். இன்னும் அந்த நம்பிக்கை பல பேருக்குண்டு. இது மனிதனுடைய பேராசையால் இந்த நம்பிக்கையுண்டாகின்றது. நமக்கு எவ்வளவுக்கும், கஷ்டப்படாமலே செல்வம் தானாக வரவேண்டுமென்ற ஆசையுண்டு. இந்த ஆசையால் எங்கேயாவது திரவியம் அகப்படுமா என்ற அவாவேன்றும் உறுத்த இதனைக்கண்டு பிடிப்போர் Water Diviner என்ற பித்தலாட்டக்காரர் வசமாகின்றனர். இந்த அவாவைத் தூண்டி செய்யும் மோசக்காரர்கள் எங்கும் இருக்கின்றார்கள்.

இரண்டொருஇடங்களில் புதைந்ததிரவியத்தைத்தேடப்போய் சில அஸ்திபங்கள் அழிந்தது தெரியும். இதோடு போவதில்லை. சில மந்திரக்காரர்கள் பேச்சைக்கேட்டு திரவியத்தைக்காக்கும் பூதத்திற்கு நரபலி கொடுத்தோர் தூக்கிடப்பட்டார்கள். புதைத்து வைக்கும் பணத்தை எடுக்கப்போய் தூக்கிலிடப்பட வேண்டியிருந்தது. இது என்ன மூடத்தனமென்று எண்ணுகின்றீர்களா? இந்த மூட நம்பிக்கையைவிட அதிகமான மூடத்தனம் என்ன இருக்கின்றது? இந்தப் பித்தலாட்டத்தை நம்பும்படி மந்திரக்காரர் செய்யும் மோசம் ஒன்றுண்டு. அதாவது இந்த பித்தலாட்டத்தைச் செய்வதற்கு முன்பே சில பழைய சவரன்களை வேண்டிய இடத்தில் புதைத்து விடுகின்றார்கள். இதனை தெரியாத பேதைகள் குறித்த இடத்தில் தோண்டிப்பார்த்து சில பழைய சவரன்கள் அகப்பட்டதால் மந்திரக்காரன் சொல்லை நம்பி இன்னும் அதிக பணம் கிடைக்குமென்ற ஆவலால் மேலும் மேலும் பணத்தைச் செலவு செய்து நஷ்டமடைகின்றார்கள். மந்திரக்காரனுடைய தோழர்கள் அந்தப் பக்கத்தில் தாங்களே புதைத்து வைத்த பணத்தைக்கண்டுபிடித்த சம்பவத்தை அக்கம் பக்கங்களில் விளம்பரம் செய்கின்றார்கள். அதனால் இவர்கள்மேல் பல இடங்களில் நம்பிக்கை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இந்தியாதி சூழ்ச்சிகளால் இந்த மோசம் எங்கும் பரவுகிறது. புதையலைக்கண்டுபிடிக்கும் வித்தை இதுவே. இதுவோர் பெருத்த மோசமென்பதற்குத் தடையில்லை. ஞானக்கண்ணால் தெரிந்து சொல்வதென்பதும் சுத்தப்பொய்யென அறிக.

சில இடங்களில் புதைத்து வைத்த திரவியம் அகப்படுவது வாஸ்தவம். யாரோ சிலர் பண்டைக்காலத்தில் புதைத்து வைத்த சவரன் வீடுகட்ட கடக்காலுக்குத் தோண்டும்போதும், கிணறு வெட்டும்போதும், தற்செயலாக (Accidentally அகப்படுவது ஏகதேசம். இதனைக்கண்ட சிலர், தங்கள் அவாவினால் தங்களுக்கும் அகப்படாதா வென்ற கோணிக்கை மிகுந்து பரவும் அந்த அவாவை திருப்திசெய்ய, மோசவேஷக்காரர் எங்கும் திரிகின்றார்கள். இந்தப் புதைக்கப்பட்ட திரவியங்களை பூதங்கள் (Demons) காக்கின்றனவாம்! அவைகளுக்கு நரபலி கொடுக்க வேண்டுமாம்!! இத்தியாதி மோசக் கதைகளைக்கட்டி, ஏழைகளை ஏமாற்றுகின்றார்கள். இவ்வித அறியாமை நமது நாட்டை விட்டு ஒழியுங்காலம் எக்காலமோ!

3 (Water Divining) தண்ணீர் கண்டுபிடித்தல் என்ற ஓர் வித்தையுண்டு. அதாவது கண்ணுக்குப் புலப்படாத தண்ணீர்ப் பாங்கைக் கண்டு பிடித்தல் எனப்படும். இந்த வித்தையில், இரண்டுவித முண்டு. அவையாவன விஞ்ஞான முறையொன்று, போலி ஞானமுறை மற்றொன்று

விஞ்ஞான முறையில் அநேக இடங்களில் தண்ணீர் வளத்தை கண்டு பிடிக்கலாம். அம்முறையாவன, அக்கம் பக்கத்திலுள்ள நீர்வளப்பதைக்கொண்டும், கிணற்று நீர், ஊற்று நீர், மலை சுனை, அருகாமையிலுள்ள ஆற்று ஜலம் அதன் மணல் முதலிய வசதிகளைக் கொண்டும் அடி ஜலத்தை நிர்ணயம் செய்தலாகும். பள்ளம் வெட்டி, நீரோட்டத்தைப் பார்த்தும், அடி நீரைக் கண்டுபிடிக்கலாம். தோண்டத் தோண்டவரும் மணல், கல், உப்பு, முதலிய படைகளாலும் (Strata or Layer) நீர் வளப்பம் தெரியும். இது பண்டைக் கால மெஞ்ஞான முறை. தற்காலத்தில், மேற்சொன்ன அனுமான ஞானத்தால் (Inference) அல்லாமல், பிரத்தியட்சமாகவே அடியிலிருக்கும் ஜலத்தைக்கண்டு பிடிக்கலாம். அதாவது, (Boring) குழாய்களைக்கொண்டு பூமியை துளை செய்து அடி நீரைக் கண்டுபிடித்தல். 500 1000 அடி ஆழத்தில்கூட துளை செய்து அங்கிருக்கும் நீர்ப் பாங்கை மேலே கொண்டுவந்து நேரே பார்க்கலாம். இவைதான் மெஞ்ஞான முறை எனப்படும்.

ஆனால் போலி ஞான முறை என்னவெனில்(Water Diviner) தண்ணீரைக் கண்டு பிடிப்பவன் என்ற ஒருவனால் கண்டு பிடிக்கும் நீர் வளப்பமாகும். இதன் விபரம் என்னவெனில் ஒருவன் ஒரு கொம்பை அல்லது கழியை கையிலேந்தி செல்லுங்காலை(Divining Rod) எந்தவிடத்தில் அவனுக்குத் தண்ணீர் சைகை உண்டாகின்றனவோ அங்கே தோண்டிப் பார்க்கிறான், அந்த இடத்தில் நீர் வளப்பம் தோன்றுவதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால், இந்த வித்தையை சோதனை செய்தவர்கள் தண்ணீர் கண்டு பிடிப்போன் காட்டுமிடங்களில் எல்லாம் நல்ல வசதி கிடைக்கவில்லையாம். இது அதிலுள்ள ஒருவித பிழையாகும். (Error) இரண்டாவது பிசகு என்னவெனில், இந்த வித்தையில் அநேக தோல்விகளும் உளவாம். (Failures) மூன்றாவது என்னவெனில், பத்து இடததில் ஜலம் இருப்பதாகக்காட்டி 8, 9 இடங்களில் தவறிப்போமாகில், சொன்ன இரண்டொரு இடங்களில் தண்ணீர் கண்டது (mere accident) வெறும் தற்செயலாய் இருக்

கலாம் என்று சொல்லவேண்டும். நான்காவது, எவ்விதமாக எத்தத் தூண்டுதல் மேல் எக்காரணத்தைக் கொண்டு ஜலத்தைக் கண்டு பிடிப்போன் (Water Diviner) குறித்த இடத்தில் ஜலம் உள்ளதாகச் சொல்லுகிறான் என்பது அவனுக்கே தெரியவில்லையாம்! இத்தியாதி குறைகள் அடங்கி உள்ளது இந்த போலி ஞானம்.

சில வருஷங்களுக்கு முன் சர்க்கார் சிற்ப சாஸ்திரியாகிய (Government Architect) சிசாசம் என்ற ஒருவர் தண்ணீர் வசதிகளைக் கண்டு பிடிக்கும் வல்லமை பொருந்தியிருந்ததாக வதந்தி. ஆனால் அவருடைய மாய சக்தியை சர்க்கார் பொருள் படுத்தாமல், சாதாரணமாக குழாயைக்கொண்டு பூமிக்குள் நுழைய வைத்து அதனால் நீர்வளப்பத்தைக் கண்டு பிடிக்கும் முறையைத்தான் கையாளுகின்றார்கள்.

"இந்த மாயவித்தைக்காரர் மரத்தின் கிளையை கையிலேந்தி நிலத்தின் மேல் நடக்கும்போது அந்தக் கிளை மூலமாக தண்ணீர் இருப்பதாகத் தெரிகிறது என்றதோர் கதையைக் கட்டி விடுகிறார்கள். மரக்கிளைக்கு மாய சக்தி (Occult Power) எப்படி வந்ததோ, அது விளங்கவில்லை. இன்னுஞ் சிலருக்கு நடந்துபோகையில் தண்ணீர் அகப்படும் இடம் ஏதோ ஓர் உணர்ச்சியால் தெரிகிறது என்றும் சொல்லுகின்றார்கள். அது என்ன உணர்ச்சி என்பதும் விளங்கவில்லை. இவ்விதமாக எங்கேயோ ஓர் இடத்தில் ஜல வசதி கண்டு பிடிப்போர் (Water Diviner) ஜலப்பாங்கைக் கண்டுபிடித்து விட்டால் இத்தியாதி பொருத்தமில்லாததும், ஒன்றுக்கொன்று மாறானதும், தெரியக்கூடாததும் பரீட்சைக்கு இடங்கொடுக்காததுமான காரணங்களைக் குறிக்கின்றார்கள். இந்த வித்தையில் எல்லாம் மாயமாகவே இருக்கின்றது.

4. Crystal Gazing அதாவது மை போட்டுப் பார்த்தல் என்பதும் ஓர்மாய வித்தை. இது நமது நாட்டிலும்வழங்கி வருகின்றது.ஸ்படிகக்கல்லையாகிலும்,கண்ணாடியையாகிலும், வெற்றிலையில் மையைத் தடவியாகிலும், அதனைக் கூர்ந்து பார்த்தால் திருடின திருடனையும், புதைத்த பொருளையும், செத்தவர்களையும் இன்னும் காணாத பொருள்களையும், காணலாமென்பது ஓர் கதை. இவ்வளவு எளிதில் திருடனைக் கண்டுபிடிப்பதென்றால் துப்பறியும் சேவகர் (Detectives) வேண்டியதில்லை, என்று தோன்றுகிறது! நான் சிறுவனாக இருக்கும்போது என் பெரிய தகப்பனார் வீட்டில் மை போட்

திப் பார்த்தார்கள். வெற்றிலையில் மையை இட்டு அதில் உற்று நோக்கச்சொன்னார்கள். அதில் பார்த்தபோது எனது கண் ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் மற்றவர்கள் பார்த்து இதோ ராமர் வந்தார்! அதோ லட்சுமணர் வந்தார்! அதோ அனுமார் வந்தார்! என்று கூச்சலிட்டனர் இது அந் தக்காலத்தில் நமக்கு விளங்கவில்லை. ஆனால், அனைத்தற் காலம் மெஞ்ஞான வரையிலாக நோக்குமிடத்து இதுவோர் Self hypnotism என்று தோன்றுகின்றது. நினைத்ததை இரவில் கனவாகக் காண்பதுபோல் பகலில் கோரியதை இக்க Self-hypnotism என்ற பகற் கனவில் காண்பது சகஜம். வேதாந்திகள், மூக்கின் முனையை உற்றுப் பார்க்கும் பழக்கத் தைக் கற்றுக்கொடுக்கின்றார்கள். அதுவும் ஓர் Self-hypnotism உண்டாகும் பழக்கமே. பகற்கனவில், நாம் கோரும் பொருளைகள் தோன்றும். இதை Hallucination என்பார் கள் பழுகையில் பாம்பைப் பார்ப்பதும் (Hallucination) அதாவது பகற்கனவே. அதுபோலவே, மையில் ராம, லட் சுமண, சீதா, அனுமானைப் பார்ப்பதும் (Hallucination) இந்தத் தோற்றங்கள் கன்னகள் அயர்ந்த காலையில் உண்டா கினறன கிறிஸ்துவ பக்தர்கள் (Christian Saints) எசுவை பார்க்கின்றேன். தேவதைகளுடன் (Angels) பேசுகின்றேன் என்று சொல்வதெல்லாம் இந்த [Hallucination] அதாவது பகற்கனவே யாகும். மகமது நபி, ஓசை கேட்டதாக சொல்வதும், இந்தப் பகற்கனவே. நரம்பு வியாதியால் பீடிக் கப்பட்டவர்களுக்கு இவ்விதத் தோற்றங்கள் காண்பது சகஜ மே. கண்களை மூக்கின் முனையில் நோக்கும்படி செய்தால் பலவித தோற்றங்கள் தோன்றும். அந்தத் தோற்றங்களை நமது இச்சைக்குத் தக்கவாறு அர்த்தப்படுத்திக்கொண்டு விநாயகர் வந்தார், காளி அம்மன் வந்தாள், அனுமான் தோன்றிற்று, பிரமத்தைக்கண்டேன் என்று பிதற்றுகின்றார் கள். இந்தப் பிதற்றல்களுக்கும் ஜன்னி கண்டு பிதற்றுவதற் கும் வித்தியாசம் அதிகமில்லை. ஆனால் ஒன்று நாமாக வரவழைத்துக்கொண்ட பிதற்றல். மற்றொன்று நம்மை மறந்து பிதற்றும் பிதற்றல். இதுதான் இவ்விரண்டு சம்ப வங்களுக்குமுள்ள வித்தியாசம்.

வேதாந்திகள் ஞானயோகத்தில் உத்திக்கமலம் விரிந்து குண்டலனி என்று வழங்கும் அவயவம் மலரும் என்று சொல்லுவதுண்டு. அந்த வேளையில், ஜீவான்மா பரமான்மா வுடன் கலக்கும் என்ற பிதற்றலும் [Nervous tension]

அதாவது சம்புச் சோர்வை உண்டாக்கிக்கொண்ட நிலையை பிரமத்தோடு ஐக்கிய மென்று பிதற்றுவதே யாகும்.

சைவ வைணவ பக்தர்கள் உருக்கத்துடன் தங்கள் கடவுளை தியானிக்கும்போது பரமசிவனையோ, பார்வதி சமேதராய், அல்லது மகா விஷ்ணுவையோ லட்சுமி சமேதராய் தரிசிக்கின்றேன் என்று சொல்வதும் இந்தப் பகற்கனவால் சொல்லும் சொற்களேயாம். படங்களில் மகாவிஷ்ணு லட்சுமி சமேதராய் கருட வாகனாரூடராய் வரைந்துள்ளதை பார்க்கின்றோம். இதனையே நினைக்குங்காலை அதேமாதிரி பக்தர்கண்களுக்குத் தோன்றுகின்றது. இதைத்தான் பக்தர்கள் காணும் அருள் தோற்றமென்பார். சைவ புராணங்களில் கூறியுள்ள அருள் தோற்றங்கள் பகற்கனவுகளில் சேர்த்தவைகளே. பக்தர் கண்களுக்குத் தோன்றும் கடவுள் பிரசன்னங்கள் யாவும் கட்டையைக் கள்ளனென்று பாவிக்கும் மனப்பான்மையால் உண்டான காட்சிகள் என அறிக. இவ்விதக் காட்சிகளை Illusions என்றும் Hallucination என்றும், (Day dream) பகற்கனவென்றும் மெஞ்ஞானிகள் கூறுவர்.

மையில் தோன்றும் தோற்றங்களும். பகற்கனவென்றே எண்ண வேண்டும். உண்மையாகவே இதில் தோன்றும் தோற்றங்களை மாய்கை அல்லது Illusion என்று கூறலாம். கண் மயக்கத்தால் காணும் காட்சிகளைக்கொண்டு உலக வாழ்வை நடத்துவதாகக் கூறுவது உன்மத்தர்களுக்கு அடுக்குமே அல்லாது விவேகிகளுக்குப் பொருந்தாது.

இவ்வித மாயவித்தை இன்னும் அனந்த முண்டு. செத்தவர்களைக்கண்டு பேசுதல், பேய் பிசாசுகளைக்காணல், மகாத்மாக்களைத் தரிசித்தல், முதலிய மாய்கைச் சொற்களெல்லாம் (Hallucinatory Expressions) மாயவித்தைக்காரர்கள் [Spiritualists] கூறும் கதைகள். இவைகளை விசாரிக்கப் புகுந்தால் கடையில் நமதுமூதாதைகளாகிய காட்டுமிராண்டிகள்கண்ட பகற் கனவுகளை நாமும் பண்டைக்கால பழக்க வாசனையால் இன்றைக்கும் காண்கின்றோம். ஆனால் விஞ்ஞான வித்தையால் நாம் இருளைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். இடியைக்கேட்டு பயப்படுவதை விட்டு

ஓர் சிறு கதை.

மாணிக்கம்.

(துளஜாராம் ராவ்.)

சூரியன் மறைகிறான், அவன் மறைந்ததைக் கண்டு சந்திரன் உதயமாகிறான். அன்று பூர்ண பௌர்ணமி தினம். ஹா! என்ன ரம்மியமான தோற்றம். நான்கு பக்கங்களிலும் மலைகள். மலைகள் ஒன்றுக்கொன்றுமோதிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், வீரபுரத்திற்கே, அவை நான்கு பக்கங்களிலும் பெரிய மதில் சுவர்களை எழுப்பியிருப்பதைப்போல் தோன்றுகிறது. கிழக்கே இரண்டு மலைகள் விலகியிருக்கின்றன. அந்தக் கணவாயின் வழியாகத்தான் அவ்வூருக்கே போக்கு வரவு சாதனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அன்று கிழக்கே மலைகளுக்கு மேல் சந்திரன் உதயமாகுவதைப் பார்த்தால் அந்த ஊருக்கே ஓர் பெரிய மின் சார விளக்கு ஏற்றி வைத்திருப்பதைப்போல் தெரிகிறது.

மலையின் அடிவாரத்திற்குச் செல்வோம். விவசாயிகளும், அவர்களது பெண்டிர்களும் நிலத்தில் வேலை செய்து விட்டு வீட்டுகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஹா! என்ன இனிமையாக பாடுகிறார்கள்! எதற்காக பாடுகிறார்கள்? அந்த சந்திர பிம்பத்தில், தாங்கள் நான் முழுவதும் நிலத்தில் வேலை செய்த கஷ்டம், தெரியாமல் இருப்பதற்காக. ஹா! என்னே சிரமபரிகாரம்! யாருக்காக இவ்வளவு சிரமம்? தங்கள் வயிற்றுக்காகவா? அன்று; அன்று. முதலாளிகள் உல்

விடோம். புயல்காற்று மழைகளைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். நாகணத்தைக் கண்டு பயப்படுவதை விட்டுவிட்டோம். இன்னும் நமக்குள் விஞ்ஞானம்(Science) பரவப் பரவ மாயவித்தைகளில் வைத்துள்ள பொய் நம்பிக்கைகளை விட்டு விடுவது திண்ணம். ஆதலின் மூட நம்பிக்கையின்று நமது இந்திய உலகை மீட்கும் பொறுப்பு நமது சுய மரியாதைத் தோழர்கள்மேல் தான் தங்கியுள்ளதென அறிக.

லாசமாகவும், இன்பமாகவும் காலந்தள்ளுவற்காக. இவ்வளவு சிரமப்பட்டும் தங்களுக்கு கால் வயிற்று கஞ்சிக்கு அன்னம் அகப்படாதே என்பதை அவர்கள் சிறிதளவேனும் கவனிக்கவில்லை. ஒரு சிலர் உல்லாசமாகவும், இன்பமாகவும் காலந்தள்ள, இவர்கள் தங்கள் குடும்பங்களுடன், இரத்தம் சுண்ட உழைக்கிறார்கள். என்னே! விவசாயிகளின் தயாள குணம். தகப்பன் தன்னுடைய செல்லக் குழந்தை இன்பமாக காலந்தள்ள, அக்குழந்தைக்கு சிறிதளவேனும் கஷ்டம் கொடாமல் தான் தன் முழு சிரமத்துடன் வேலை செய்து அதன் ஆசையைத் திருப்தி செய்கிறான் அன்றோ? இதை நினைத்தால் முதலாளிகள் விவசாயிகளின் செல்லக்குழந்தைகளோ என்று தோன்றுகிறது. அதனால்தானோ தங்கள் செல்லக் குழந்தைகள் எதைச் செய்தாலும் விவசாயிகள் பொறுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என ஐயுறுமாறு இருக்கிறது. சரி, இதை இத்துடன் நிறுத்திக்கொள்வோம்.

மற்றொரு பகுதிற்கு செல்வோம். அங்கே ஹா! என்னே! பள்ளி மாணவர்கள் உல்லாசமாக விளையாடுகிறார்கள். சிறிதும் களங்கமற்ற மனது. அவர்கள் மனதில் கொஞ்சம் கூட கவலையில்லை. நாளைக்கு தாங்கள் முதலாளிகளுடையவும், சோம்பேறி கூட்டங்களுடையவும் வலையில் சிக்கி சுதந்தரத்தை இழந்து, பகுத்தறிவை இழந்து, அடிமைகள் ஆகப்போகின்றோமே என்ற கவலை சிறிதளவேனும் இல்லை. அந்தோ! இவர்களும் இவர்கள் சந்ததியாரும் ஆயுள்பரியந்தம் இப்படியே அடிமையற்று உல்லாசமாக இருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. அதற்காக இன்றே இவர்களின் பிற்கால வாழ்விற்கு இதிக்கண்களாக இருந்தும் முதலாளி வர்க்கத்தையும், அதற்கு உதவி புரியும் சாதனங்களையும் இன்றோடு தொலைத்துவிட வேண்டும் என்கின்ற புத்துணர்ச்சி பொங்குகின்றது.

மற்றொரு பக்கத்தில் அவ்வூரிலேயே உயரமாக இருப்பது கோயிலின் சிகரம்தான். அது நின்று இருப்பதைப் பார்த்தால் மக்களின் முகபோக்கான எண்ணங்களை மேல் எறவொட்டாமல் அழுக்கிக்கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. அங்கிருந்து கிளம்பும் சங்கநாதமோ, மக்கள் நினைக்கும் எண்ணங்கள் எல்லாவற்றையும் ஊதி யெறிவதுபோல் கேட்கிறது. டாண், டாண் என்று வரும் மணியின் ஓசையோ முதலாளிகளையும், சோம்பேறிக் கூட்டங்களையும் அழிய வொட்டாமல், அவர்களுக்கு சாதகமாக உதவிபுரிய

கடவுள் தயாராக இருக்கிறார் என்று அவர்களுக்கு நினைப் பூட்டுவதுபோல் தோன்றுகிறது. அக்தோ! அக்கோயிலுக்குள் போகும், விவசாயிகளையும். தொழிலாளிகளையும், பாட்டாளி மக்களையும், ஏழைகளையும் நினைத்தால் அவர்கள் தங்கள் செல்லச் குழந்தைகளான, முதலாளிகளும், சோம்பேறிக் கூட்டங்களும் நீடூழிவாழ பிரார்த்தனை செய்கின்றார்களோ என்று தோன்றுகிறது. ஹா! என்னே மக்களின் மூடத்தனம்!

இந்தச் சமயத்தில்தான் வீரபுரம் தொழிற்சாலை கடிகாரத்தில் மணி ஆறு ஆயிற்று. உடனே புகைக் கூண்டிலிருந்து சத்தம் கிளம்பிற்று. தொழிலாளிகள் தொழிற் சாலையிலிருந்து வெளியேறுகிறார்கள். ஓர் பயங்கர குகையிலிருந்து வெளியேறினாற்போல் அவர்களுக்குத் தோன்றிற்று. காரணம் கவலைதான். தினசரி சம்பளம் வாங்கினோர் இப்பொழுது என்ன பண்ணுவது, என்ற கவலையில் வெளியேறுகிறார்கள். அத்தொழிற் சாலையின் லாபாதிகாரி (முதலாளிகள், அத்தொழிற்சாலையில் கிடைக்கும் லாபத்திற்கு மட்டும்தான் அதிகாரிகளாய் இருக்கிறார்களே ஒழிய அங்கே கஷ்டப்படும் பாட்டாளி மக்களின் கஷ்டத்தை கொஞ்சமேனும் ஏறிட்டுப் பார்ப்பதில்லை) தொழிலாளிகளுக்கு கால் வயிற்று கஞ்சிக்கு போதுமான அளவு கொடுத்த சம்பளம்தான் அவர்கள் கவலைக்கு காரணம். பாருங்கள்! எலும்பு முறிய வேலை செய்தாலும், வயிறார சாப்பாடு அகப்படுவதில்லை. அதற்குப் பதிலாக கவலைதான் அகப்படுகிறது.

இத்தினசரி சம்பள வர்க்கத்தில் சேர்ந்தவன் தான் நம் மாணிக்கம். அவன் பன்னிரண்டு மணிநேரம் உழைத்து வாங்கின சம்பளம் எவ்வளவு? ஹா! மூன்று அணாக்கள் தான். இன்றைக்கு கால்வயிற்றுக்கு போதும், ஆனால் காளைக்கும் கால் வயிற்றுக் கஞ்சிக்குத் தானே உழைக்க வேண்டும் என்ற கவலையுடன் வெளியேறுகிறான். வயதோ பதினைந்து! கவலையோ அதிகம். இத்துடன் தெருவில், வேலையின் கஷ்டத்தாலும், பசியினாலும், தடுமாறிக் கொண்டு சென்றுகொண்டு இருக்கிறான்.

லக்ஷ்மி புத்திரனின் மகன் என்று சொல்லும்—தொழிலாளிகள் இரத்தத்தை உறிஞ்சும், அந்த லாபாதிகாரியின் மகன் உல்லாசமாக விளையாடிவிட்டு அதி விரைவாக வீட்

டுக்கு சென்றுகொண்டு இருக்கிறான். பாருங்கள் தொழி லாளி கையால் செய்யப்பட்டு, முதலாளி கையில் சிக்கி இருக் கும் மோட்டாரின் தைரியம்! தெருவில் தள்ளாடிப்போய்க் கொண்டிருந்த மாணிக்கத்தின்மேல் சீறிற்று. அதன் சக்கரம் அவன் கால்களின்மேல் ஏறிற்று. பிறகு கேட்பானேன்? ஏழை மாணிக்கம் ஜன்ம மூடவன் ஆனான். பிறகு என் தொழிற்சாலையின் லாபாதிகாரி இவனை ஏறிட்டுப்பார்க் கிறான்?

மாணிக்கம் திடகாத்திரமுள்ள சரீர கட்டுடையவன். ஆனால் தடிகள் இல்லாமல், தன் கால்களின் உதவியால் அவ னால் நிற்க முடியவில்லை. இரண்டு தடிகளின் ஆதரவைக் கொண்டு தெருவில் அலைந்துகொண்டு வயிற்றுக்காக பிச்சை யெடுப்பதைத்தவிர அவனுக்கு தினசரி உத்தியோகம் கிடை யாது. ஏழை மாணிக்கம், பால்ய வயதிலேயே தாய், தந்தை யரை இழந்தவன். ஆகையால் யாராவது இரக்கமுள்ள பிராணி. இரக்கத்துடன் அவனுக்கு கொஞ்சம் அன்னம் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு 'டீ' கடைக்காரன் அவனை கூப்பிட்டு "கிராக்கி"களுக்காக, பாடச்சொல்லி ஒரு 'சிங்கிள் டீ' கொடுத்துக்கொண்டிருந்தான்.

ஆனால் இப்பொழுது அந்த காட்கள் போய்விட்டன. மூடவன் ஆனதிலிருந்து தரித்திர புத்திரனான மாணிக்கம் கற்பது வருடங்களாக அவ்வூரிலேயே பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததால் அவனை அவ்வூர் ஜனங்கள் வெறுக்கத் தொடங்கினர். சிலர் அவனை அவ்வூரைவிட்டு ஓடிப்போ என்றுகூடச் சொன்னார்கள். ஆனால் மாணிக்கம் அந்த ஊரைத்தவிர வேறு ஓர் ஊரும் கனவிலும் அறியான்.

இந்த இரண்டு நாட்களாக அவனுக்கு ஒருவரும் அன் னம் போடாததால் அவனுடைய உயிர் ஓர் கவள அன்னத் திற்கு துடித்துக்கொண்டிருந்தது. அவனை ஓர் மனிதப் பிராணியும் ஏறிட்டுப் பார்க்கவில்லை. பிச்சை கேட்டால், "இரண்டு காளைக்கு முன்தானே பிச்சை போட்டேன் அதற் குள்ளேயா வந்துவிட்டாய், என்று அவ்வீட்டு எஜமானன் துரத்துவான். ஆனால் மனிதப் பிராணிக்கு தினந்தோறும் சோறு வேண்டும் என்ற விஷயம் அவ்வீட்டு எஜமான் அறி யான் போலும். இப்படிச் சொன்னவுடன் பதில் பேசாமல் மற்றொரு வீட்டைப் பார்ப்பான். அங்கே 'என்ன இழவு! இது பெரிய தொந்தரவாய் இருக்கிறது. இவனுக்கு ஆயுள்

பரியத்தம் வடிச்சுக் கொட்ட நிலம் ஏதாவது குத்தகைக்கு வாங்கி யிருக்கிறோமா என்ன? இரு, இவனை இந்த ஊரை விட்டே விரட்ட வேண்டும்' என்கிற கூக்குரலைக் கேட்பான். ஆனால் யார் என்ன சொன்னாலும் அவைகளை எல்லாம் வயிற்றுக்காகப் பொறுத்து வயிற்றுக்குள்ளேயே போட்டுக் கொண்டு வீடு வீடாக அலைவான். மனிதனுக்கு அந்திய காலத்தைக்காட்டிலும் மத்திய காலத்தில் தான் கஷ்டம் அதிகம் பொறுக்க வேண்டி யிருக்கிறது. காரணம் அந்திய காலத்தில் கஷ்டம் ஒரு தடவைதான் பொறுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் மத்தியகாலத்தில் மனிதன் தினந்தோறும் கஷ்டம் பொறுக்க வேண்டியிருக்கிறது.

ஒருவரும் அன்னம் போடாமல், அவனை அவ்வூரை விட்டே துரத்த ஏற்பாடு செய்ததினால், மாணிக்கத்திற்கு, தன் ஆயுள் இது வரையிலும் இருந்த ஊரை விட்டு வேறு ஊருக்குப் போவதாய் இருந்ததால் அவன் மனம் அதிக வேதனைப்பட்டது. ஆனால் இந்த இரண்டு நாளாக அவன் வயிற்றில் சிறிதளவேனும் அன்னம் இல்லாததால் அவ்வூரைவிட்டு, அதற்கடுத்த ஊராகிய ராம்பூர் போக அவன் மனதில் நிச்சயித்து விட்டான். பையைப் போலத்தான், அவன் வயிறும் பூஜ்யமாய் இருந்தது. ஆகையினால் ஐந்து மைல் நடக்க சக்தி எங்கே இருக்கும்?

குச்சிகளின் உதவியால் ராம்பூர் பக்கம் நடக்க ஆரம்பித்தான். ஆனால் ஐம்பது, அறுபது அடி நடந்தவுடன் அவனுக்கு அதி பயங்கரமாக மூச்சு திணற ஆரம்பித்தது. ஐந்து, பத்து நிமிஷங்கள் தெரு ஓரத்தில் உட்கார்ந்து இளைப்பாறி மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். பசியினால் அவனுடைய பிராணன் மிகவும் தளர்ந்திருந்தது. அவனுக்கு ஏதாய் இருந்தாலும், சாப்பிட கொஞ்சம் அகப்பட்டால் போதும் போல் இருந்தது. ஆனால் அது அகப்படுவது எப்படி என்பது தான் பெரும் கேள்வியாய் இருந்தது.

மாணிக்கம் மூன்று மணி நேரம் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டு நடந்து கொண்டிருந்தான். வழியில் இரண்டு, மூன்று குயவர்களின் குடிசைகள் தென்பட்டன. அங்கு போய் பிச்சைக் கேட்டான். அவர்கள் கொஞ்சம் அரிசி போட்டார்கள். அதை எப்படித் தின்பான்? கொஞ்சம், கொஞ்சம் மென்று கொண்டே போனான். ஆனால் இது எவ்வளவு தூரம் நிற்கும்? மணி ஒன்பது; யெல்லை

மயக்கத்தால் மாணிக்கம் கீழே விழுந்தான். அரைமணி நேரம் கழித்துத்தான் பிரக்ஞை வந்தது. ஆனால் பசிப்பிணி அவனை படுக்க விடவில்லை. மறுபடியும் நடக்க ஆரம்பித்தான்.

ஒரு பர்லாங்கு தூரம் சென்றவுடன், ஓர் தோட்டம் தென்பட்டது. பட்டாமணியம்—அத்தோட்டத்து சொந்தக்காரன்—அத்தோட்டத்தில் நானாவித பழவகைகளின் மரங்களை வைத்திருந்தான். அதில் திராக்ஷை கொடிகள் படர்ந்திருந்தன. அப்பக்கமாக போகும் பொழுது மாணிக்கத்தின் கண்கள், அத்திராக்ஷைகளின் மேல் ஊடுருவிச்சென்றன. திரட்சியான திராக்ஷைப் பழங்களை பார்த்தவுடன், அவனுடைய பசிப்பிணி அதிக வேதனையுண்டாக்கியது. உள்ளே சென்று திராக்ஷைப் பழங்களை எடுத்தால், அது திருட்டு ஆகும், பிறகு, அதற்கு 'பினல் கோடில்' தண்டனை சொல்லி இருக்கிறது என்ற இந்த தத்வஞானம் அவனுடைய தலையில் அச்சமயம் ஏறவில்லை. வேலியை விலக்கிக் கொண்டு மெதுவாக உள்ளே சென்றான். ஒரு குச்சியின் யின் உதவியால் இரண்டு தட்டு தட்டினான். உடனே இரண்டு மூன்று கொத்து திராக்ஷைப் பழங்கள் கீழே விழுந்தன. என்னே! அவனுடைய ஆவல்! உடனே பொறுக்குவதற்காக குனிந்தான். ஆனால் பின்னாலிலிருந்து ஓரு பயங்கர உதை அவன் இடுப்பில் விழவே அவன் உடனே அந்த இடத்திலிருந்து பத்து, பதினைந்து அடிக்கு அப்பால்போய் உருண்டு விழுந்தான். பின்னர் மாணிக்கம் பயத்தினால் தலையைத் தூக்கி பின்னால் பார்க்கும்பொழுது, அந்தப் பட்டாமணியம் கோப ஆவேசம் பூண்டிருப்பதையும், தன்னை கண்டபடி திட்டிக்கொண்டு, உதைப்பதையும் குத்துவதையும் கண்டான். இந்த சத்தத்தைக்கேட்டு அந்தப் பட்டா மணியத்தின் மகனும், அவனது சகபாடிகளும் ஓடி வந்தனர். அவர்களும், அப்பட்டா மணியத்திற்குதவியாக மாணிக்கத்தை கைப்பிடைக்க ஆரம்பித்தார்கள். கைகள் நோகவே அவனை அடிப்பதை நிறுத்தினார்கள். இரத்த வெள்ளத்தில் மூழ்கிகிடந்த மாணிக்கத்தை அவர்கள் ஓர் இருட்டு அறையில் போட்டு அடைத்தார்கள். பிறகு பட்டாமணியம் அருகிலிருக்கும் ராம்பூரிலிருந்து போலீஸை அழைத்துவர தன் மகனை அனுப்பினான்.

அடைக்கப்பட்டிருந்த இருட்டு அறையில் மாணிக்கம் மரணத்தருவாயில் இருப்பவனைப்போல் கீழே விழுந்து கிடந்

தான். அடிகளினால், அவன் தேகம் முழுவதும் வீங்கி அதிக வேதனையை கொடுத்துக்கொண்டிருந்தது அவன் வயிற்றிலிருந்த பசி அனலோ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. என்ன செய்வான்? கண்களிலிருந்து வந்து கொண்டிருந்த கண்ணீரால் அவ்வனலை அணைக்க பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

விளக்குவைக்கும் நேரத்தில் இரண்டு ஜவான்கள் வந்து சேர்ந்தனர். பட்டாமணியம் தனக்கு புகழும், பெருமையும் வரவேண்டுமென்று பொய் புனைக ஆரம்பித்தான். "அதி பயங்கரமான திருடர்களின் கூட்டம் இவ்விடம் வந்திருந்தது. ஆனால் என்னுடைய யுக்தியினாலும் பலத்தினாலும் அக் கூட்டத்தோடு சண்டைப்போட்டேன், அவர்கள் எல்லோரும் பயந்து ஓடிப்போய் விட்டனர். ஆனால் அவர்களில் ஒரு வனை மட்டும் அதிக கஷ்டப்பட்டு பிடித்து ஓர் அறையில் போட்டு இருக்கிறேன்" என்று ஜவான்களிடம் சொன்னான்.

பட்டாமணியத்தின் இப்பேர்ப்பட்ட வர்ணனையை கேட்டுக்கொண்டே அப் போலீஸ்காரர்கள், பட்டா மணியத்தின் முன்னால் இருந்த தோசைகூடப் பழங்களை மனம் திருப்தி அடைகிறவரையிலும் தின்றார்கள். பிறகு பட்டா மணியத்தின் தைரியத்தைப்பற்றி புகழ ஆரம்பித்தார்கள்.

பட்டா மணியத்தின் பிரசங்கத்தைக் கேட்டதிலிருந்து, திருடன் பலே பக்கா திருடனாகத்தான் இருக்கவேண்டும் என்று போலீஸ்காரர்கள் நினைத்தார்கள் அவன் ஓரே யடியாய் தங்கள் மேல் பாய்வான் என்ற பயத்தினால், அவன் அடைக்கப்பட்டிருந்த இருட்டறையின் கதவை மெதுவாக அதிகபயத்துடன் திறந்தார்கள்.

மாணிக்கம் தரையில் கிடப்பதைக் கண்டு "ஏ! பக்கா திருடனே எழுந்திரு! எங்களுடன் வா" என்று ஓர் ஜவான் உரத்துச் சொன்னான்.

மாணிக்கம், தன் சக்திகளையெல்லாம் ஒருங்கே திரட்டிக்கொண்டு எழுந்திருக்க பிரயத்தனம் செய்தான். ஆனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. திருடன், பாசாங்கு செய்கிறான் என்று போலீஸ்காரர்கள் தங்கள் கையிலிருந்த சாட்டையினால் அவன் முதுகில் ஓங்கி அடித்தார்கள் பிறகு இரண்டு ஜவான்களும் சேர்ந்து அவனை பிடித்து நிற்கவைத்தார்கள்.

மாணிக்கத்தின் இருதயம், பயத்தினாலும் வேதனையி னாலும் துடித்துக்கொண்டிருந்தது, கோட்டத்து சொத்தக் காரன் கன்னை கண்டபடி அடித்து பிறகு ஏன் இந்த அறை யில் அடைத்து வைக்க வேண்டும்? அவன் போலீஸ்காரர் களை ஏன் அழைத்து வந்தான்? போலீஸ்காரர் தன்னை எங்கே கொண்டு போகப்போகிறார்கள்? அவர்கள் தன்னை என்ன குற்றம் செய்யப்போகிறார்கள்? என்ற இப்பேர்ப்பட்ட அனைத்து மனக்கேள்விகளுக்கு, மாணிக்கத்தின் கஷ்டப்படு கின்ற மூளையால் பதில் அறிய முடியவில்லை அவனுக்கு இவைகளெல்லாம் புதுமையாகவே இருந்தது. மாணிக்கம் அவன் தன் ஆயுளில், தன்னுடைய அச் சிறிய வாரிய ஜனங் களுடன் அதுவும் பிச்சையின்மூலம் உள்ள சம்பந்த முடையவ னாக இருந்ததால் அவனுக்கு மற்றைய உலகத்தின் விவகாரங் கள் ஒன்றுமே தெரியாது. ஆகையினால், போலீஸ் வந்ததி லிருந்து தூனைக்கு எனி எப்படி பயப்படுகின்றதோ அப்படியே பயப்பட்டுக் கொண்டிருந்தான்.

போலீஸ்காரர்கள் 'நட' என்றவுடன் அவன் ஒன்றும் பேசாமல் அவர்களுடன் நடக்க ஆரம்பித்தான்.

அவன் அவ்விடத்தைவிட்டு போகும் பொழுது பட்டா மணிபத்தின் வீட்டில் உள்ளோர் யாவரும் அவனைப்பார்த்து திட்டிக்கொண்டு பல்லை நற நற வென்று கடிக்க ஆரம்பித் தார்கள்.

வழியில் மாணிக்கம் இருந்த வாரியுள்ள ஓர்மணி தன் அவ னைச் சந்தித்தான். அவன் மாணிக்கத்தைப் பார்த்து ஆச் சரியப்பட்டு "அடே! இந்த நொண்டி கடைசியில் திருட்டுத் தொழில் செய்ய ஆரம்பித்துவிட்டான் போல் இருக்கிறது. மனிதனின் மனோநிலை நிரந்தரமானதன்று என்று சொல் வது உண்மைதான்" என்று சொல்லிக்கொண்டே போய்விட் டான். ஏழை! தொழிலாளி மாணிக்கத்தை எறிட்டுப் பார்ப் போர்யார்? ஒருவரும் இல்லை.

இராத்திரி பத்து மணி சுமாருக்கு ராம்பூர் வந்து சேர்ந் தனர். அவ்விடத்தில் இருந்த புதிய மனிதர்கள், பெரிய கட் டிடங்கள், கடைத்தெருவு முதலியவைகளைப் பார்த்து மாணிக்கம் திடுக்கிட்டான். வழியில் போவோர் வருவோர் அவர்கள் யாவரும் மாணிக்கத்தின் முகத்தை உற்று நோக் கிக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் ஏன் தன்னை இப்படி

காலஞ்சென்ற லர். ஜெ. ஸி. போஸ்.

லர். ஜெகதீச சந்திரபோஸ் டாக்கா நகரின் பக்கத்துக்கிராமத்தில் 1858 நவம்பர் 30-க்கு தேதி பிறந்தார்; அவரது தந்தையார் பரித்பூர் டிபூட்டி மாஜிஸ்ரேட்டாக இந்தார். ஆகவே அவரது இளமைப் பருவம் முழுதும் பரித்பூரிலே கழிந்தது. ஒன்பது வயது ஆனபோது அவர் கல்கத்தா அர்ச்சசவேரியார் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். அப்பால் அர்ச்சசவேரியார் கல்

உற்றுப்பார்க்கிறார்கள் என்பது அவனுக்கு விளங்கவில்லை. ஆனால் அவன் பிறரை ஒன்றும் கேட்கவில்லை. போனகாற்பது வருஷங்களாக பிறருடன், பேசசந்தர்ப்பம் அகப்படாததால் மாணிக்கத்திற்கு, பிறருடன் தான்கு வார்த்தைகள் கூடப்பேச முடியவில்லை.

இரவில் அதிக நாழி ஆகிவிட்டதால் போலீஸ்காரர்கள் தொழிலாளியை ஓர் அறையில் அடைத்து வைத்திருந்தார்கள். மனிதப்பிராணிக்கு சாப்பாடு, தண்ணீர் அவசியம் என்பது அந்தப் போலீஸ் புலிகள் மண்டையில் தோன்றவில்லை.

மறு நாள் காலையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஐயா முன்னிலையில், மாணிக்கத்தை விசாரணைக்கு கொண்டுவர, அதற்காக போலீஸ்காரர்கள் அவனை அடைத்து வைத்திருந்த அறையின் கதவை திறந்தார்கள். அவனை கூப்பிட்டார்கள். ஆனால் பதில் இல்லை. திருடன் கொஞ்சம்கூட அசையவில்லை என்பதைக் கண்டு அவனை எழுப்புவதற்காக அவனை தொட்டார்கள். திருடனின் உடம்பு ஜில்லென்று இருப்பதைக் கண்டு, அவன் ஜெயிலின் அறையிலிருந்து அல்லாமல் இந்த உலக கூண்டுக்குள்ளே யிருந்தே தப்பித்துக் கொண்டான் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஆச்சரியத்துடன், முன்னே இருந்த மாணிக்கத்தின் சவத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தார்கள். அந்தோ பாருங்கள்! ஏழைத் தொழிலாளியின் கதியை!.

———*———

லாரியில் உயர்தரக் கல்வி பயின்றார். அங்கே கல்விபயிலும் போது அவருக்கு பிரதிருதி சாஸ்திரத்தில் அதிக வாசனை யிருக்கும் உண்மை புலனாயிற்று.

பி. ஏ. பட்டம் பெற்றபின்பு லண்டன் சென்று வைத்திய கல்வி பயின்றார். லண்டனில் இருக்கும் போது க்ரையிஸ்டு காலேஜின் விஞ்ஞான உயர்தரக்கல்வி பயில அவருக்கு ஓரு உபகார சம்பளம் கிடைத்தது. 1881-ல் அந்த காலேஜில் பிரவேசித்தார். பிரகிருதி சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், தாவர சாஸ்திரம் முதலியன பயின்று, இயற்கை சாஸ்திரத்தி லும், விஞ்ஞான சாஸ்திரத்திலும் உயர்தரப் பட்டங்கள் பெற் றார். கடைசியாக உயர்தர விருதுகளுடனும், பட்டங்களுட னும் அவர் தமது 20-வது வயதில் இந்தியா வந்து சேர்ந்தார்.

பிரகிருதி சாஸ்திரப் பேராசிரியர்.

கல்கத்தாவுக்கு வந்ததும் அவர் கல்கத்தா மாகாண கல்லூரியின் பிரகிருதி சாஸ்திரப்பேராசிரியராகநியமிக்கப்பட் டார். அங்கே அரிய பெரிய பிரசங்கங்கள் பல நடத்தி வெகுசீக்கிரம் பெயர் நிறுவினார்.

அவரது குடும்பக்கடன் அதிகமாக இருந்தது. எனவே குடும்ப நிலைமையைச் சீர்படுத்துவதில் அவர் மிகவும் கவனை யெடுத்துக்கொண்டார். ஆகவே 1924 வரை அவரால் விஞ் ஞான ஆராய்ச்சியில் ஈடுபட முடியவில்லை.

முதன் முதல் மின்சாரக்கதிர்களை (Radiation) ஆராய் ச்சிசெய்யத் தொடங்கினார். அந்த முதல் ஆராய்ச்சியிலேயே அவர் கைமேல் பலன் அடைந்தார். அவரது ஆராய்ச்சித் திறன் உலகப்பிரசித்தியாயிற்று. அவரது ஆராய்ச்சிச் செல வில் ஒரு பகுதியை ராயல் சங்கத்தார் ஒப்புக்கொள்ளவும் முன் வந்தனர். மின்சார அலைகளுக்கு கதிர்களை வீசவும் பிரதிபிம்பிக்கவும், கிரணங்களைத் திருப்பியடிக்கவும், தரு வத்தைச் சுட்டிக்காட்டவும் முடியுமென நிரூபித்துக் காட்டி னார்.

மின்சார நுட்பங்களை யறியும் பொருட்டு பலவித மான நுட்பக்கருவிகளை அவர் கண்டுபிடித்தார். அக்கருவி கள் அவரது கைத்திறனை நன்கு விளக்கிக் காட்டின; வெகு சீக்கிரம் நேரடியான பலனளிக்கக்கூடியவைகளாயு மிருந்தன.

தந்தியில்லாச் செய்திகள்.

1896-ல் ஸர் போஸ் இங்கிலாந்துக்குச் சென்றார். அவர் கப்பலேறுமுன் 75 அடி தூரத்திற்கு தந்தியில்லாச்செய்தி களை அனுப்பி வெற்றிபெற்றிருந்தார். மார்க்கானியின் தந்தியில்லாச்செய்தி கருவி போலவே ஸர். போஸின் கருவியும் இருந்தது மார்க்கானி அந்தக்காலத்தில் சுயமாக ஆராய்ச்சி கடத்திக் கொண்டிருந்தார். தந்தியில்லாச் செய்திவழங் கும் ஒரு நூதன கருவியை ஸர் போஸ் உண்டு பண்ணினார். 1901-ல் அந்தக்கருவிக்கு பெருந் தொகை கொடுத்து வாங்க பலர் முன் வந்தார்கள் ஆனால் தன் மூளை யுழைப்பு மூலம் பணம் தேட அவர் விரும்பவில்லை ஆகவே தமது கருவி களை விற்கமுடியாதென்று அவர் கண்டிப்பாகக் கூறி விட் டார்.

ஐரோப்பிய நாடு முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்து முக்கிய நகரங்களுக்கெல்லாம் சென்றார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் பெயர்பெற்ற ஐரோப்பிய விஞ்ஞான சாஸ்திரிகள் ராஜோபசாரத்துடன் அவரை வரவேற்றார்கள்.

மீண்டும் இந்தியாவுக்கு வந்து ஆராய்ச்சி வேலையில் ஈடுபட்டார். 1902-லே அவரது வேலைகள் விஞ்ஞான உலக அங்கிகாரம் பெற்றன. அவ்வருஷத்தில் அவருக்கு ஸி ஐ இ. என்ற கௌரவ பட்டமும் அளிக்கப் பட்டது.

அவரது ஆராய்ச்சியின் பயனால் ஜடப்பொருள்களுக்கும் தாவரங்களுக்கும் உணர்ச்சியுண்டென்ற உண்மை வெளியா யிற்று. இந்த உண்மையை, பாரிஸில் நடைபெற்ற சர்வதேச விஞ்ஞான சாஸ்திரிகள் மகாநாட்டில் ஆதாரங்களுடன் விளக் கிக்காட்டிய போது ஐரோப்பிய விஞ்ஞான உலகமே திகைத் துப் போயிற்று.

அவரது பிற்கால வாழ்வு முழுதும் தாவரங்களின் பல திறப்பட்ட உணர்ச்சிகளை நிரூபணம் செய்யும் ஆராய்ச்சி யிலேயே செலவாயிற்று. தாவரங்களின் இயக்கத்தை ஆயிரமாயிர மடங்கு பெருக்கிக்காட்டும் கருவி ஒன்றைக் கண்டு பிடித்ததே அவரது ஆராய்ச்சிகளில் எல்லாம் தலை சிறந்த தாகும்.

ஆயிரத்திலொரு விநாடிப்பொழுதில் தாவரங்கள் வள ரும் அளவைக் கணக்கிடக் கூடிய ஒரு நுட்பமான கருவியை யும் அவர் கண்டுபிடித்தார்.

1915-ல் ஸர். போஸ், சர்க்கார் சேவையிலிருந்து நீங்கினார் அவரது சேவைகளைப் பாராட்டுமுகத்தான் சர்க்கார் அவருக்கு புரோபஸர் எமரிட்டஸ் என்ற கௌரவப் புனைப் பெயர் அளித்ததோடு அவரது பூராச்சம்பளத்தையும் பென்ஷனாக வழங்கினார்கள். இந்த கௌரவங்கள் அதற்கு முன் யாருக்குமே அளிக்கப்பட்டதே இல்லை. மற்றும் நைட் பட்டமும் ஸி. எஸ். ஐ. என்ற பட்டமும் வழங்கப்பட்டன.

சர்க்கார் சேவையிலிருந்து நீங்கிய பிறகும் அவர் சும்மா இருக்கவில்லை. உத்தியோக சம்பந்தமான கவலைகள் இல்லாதாகவே தமது ஜீவித லக்ஷ்யமான ஒரு ஆராய்ச்சி சாலையை ஸ்தாபிக்க அவருக்கு எளிதில் முடிந்தது. 1917ல் அவரது 54-வது பிறந்தநாளன்று போஸ் ஆராய்ச்சி சாலை ஸ்தாபிக்கப்பட்டது.

அது ஸ்தாபிதமானது முதல் பல விஞ்ஞான உண்மைகள் வெளியிட்டு விஞ்ஞான உலகம் விருத்தியடைந்து வந்தது. 1920ல் "ராயல் சொஸைட்டி" யின் மெம்பரானார். விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு அது மிகவும் கௌரவமான பதவி.

1928-ல் அவரது 70-வது பிறந்தநாள் சர்வ உலக மக்களாலும் கொண்டாப்பட்டது. உலகத்தின் நானாபாகங்களிலிருந்தும் அவருக்கு வாழ்த்துத் தந்திகள் வந்தன.

வேலை செய்து கொண்டிருக்கும்போதே கண் மூட வேண்டுமென்று ஸர். போஸ் விரும்பி இருந்ததுபோலவே அவர் கண் மூடினார். அவரது ஆராய்ச்சி பலன்கள் அவருக்கு அழியா ஞாபகச் சின்னங்களாகும். விஞ்ஞான உலகத்திலே அவர் சாதித்த காரியங்கள் மிகவும் அபாரமானவை. அவரால் பல இந்திய விஞ்ஞான சாஸ்திரிகள் பழக்கப்பட்டிருக்கிறார்கள். பல இளைஞர்களுக்கு ஊக்கமளித்து விஞ்ஞான ஆராய்ச்சி துறையில் சுவை யுண்டுபண்ணி யிருக்கிறார். எனவே அவர் எனவே அவர் மறைந்து போனாலும் அவர் ஆரம்பித்த வேலை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

பிரபஞ்சப் பொருள்களுக்கெல்லாம் துன்ப இன்பஉணர்ச்சி யுண்டென்ற புராதன இந்தியக் கொள்கையை விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் ஸ்தாபித்தவர் ஸர். போஸ் ஒருவரே.

கார்ல் மார்க்ஸ்

வாழ்க்கை வரலாறு.

II

இந்த இயக்கம் வரவர விருத்தியடையலாயிற்று. இதன் வளர்ச்சியைக் கண்டு மார்க்ஸ் உள்ளம் பூரித்தது "இப்பொழுது காரியங்கள் வெகு அனுகூலமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன அடுத்தப் புரட்சியின்போது நமது கையில் வலிமை மிகுந்திய இயந்திரம் இருக்கிறது" என்று 1867-ல் எஞ்சல் ஸுக்கு தெரிவித்தார். இந்த எண்ணத்தை 1867-ல் லாசெனில் கூடிய இரண்டாவது மகாநாடு ஊர்ஜிதப்படுத்திவிட்டது. சிக்கலும் மூர்க்கமுமானபிரச்சினைகள் விளக்கப்பட்டன. மார்க்ஸின் கொள்கை பெரும்பான்மைகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது; மகாநாட்டில் அறிஞர்களால் விளக்கப்பட்டது. லண்டனில் கூடிய ஜனரல் கௌன்சிலிலிருந்து மார்க்ஸ்பிரதான புருஷராய் விளங்கினார். ஒவ்வொரு மாதமும் சர்வதேசிய சங்கம் வளர்ச்சியடைவதையும், அங்கத்தினர்கள் பெருகுவதையும் மார்க்ஸ் மிக மகிழ்ச்சியுடன் கண்டு களித்து வந்தார். இந்த இரு மகாநாடுகளிலும் விளக்கப்பட்ட புதியகோட்பாடுகளை-தத்துவங்களை தொழிலாளர்கள் உணரலாயினர். டிரேட் யூனியன்கள் போன்ற ஸ்தாபனங்கள் பல உண்டாயின. இந்த இயக்கத்தின் எதிர்கால நோக்கும் முதலாளி வர்க்கத்தோடு தொழிலாளர் போர் தொடுக்கச்செய்வதே என எங்கும் உணரலாயிற்று. ஆகவே இந்த இயக்கம் விரும்பத் தக்கதுதானா? இதனால் தொழிலாளர்களுக்கு பயனுண்டா? அவர்களது வெற்றிக்கு இவைகள் உதவியளிக்குமா? என்பன போன்றவைகளைக் குறித்துமக்கள் சிந்திக்கலாயினர். பெல்ஜியத்தில் ஏற்பட்ட வகுப்புப் போராட்டம் இந்த இயக்கத்தின் அங்கத்தினர்களை பெருக்கிற்று. ஜர்மனியில் நடைபெற்றுக்கொண்டு வந்த யூனியன்களும் இதில் சேர்ந்தன. பிரிந்திருந்த ஆஸ்திரியாவும் இதனுடன் சேலாயிற்று. பாரிசிலுள்ள மத்திய ஸ்தாபனத்தை போலீசார் கலைத்து விட்டாலும் பிரான்ஸ் தேசமெங்கும் அச் சங்கங்கள் பரவிக்கிடந்தன.

1768 ல் பிரஸ்ஸல்ஸில் நடந்த மகாநாட்டிலும் மார்க்ஸ் வெற்றி பெற்றார். அங்கானில் பிரௌடன் மாண்டு விட்டாலும்

அவரது கொள்கையைப் பின்பற்றி வந்த பல பிரஞ்சு பிரதிநிதிகள் மகாநாட்டில் தங்கள் கொள்கையை வாதித்தார்கள். வகுப்புப் போரையும் புதிய சோஷியலிஸ்டுத் திட்டத்தையும் கோட்பாடுகளையும் அடியோடு எதிர்ப்பது என அப் பிரதிநிதிகள் கங்கணம் கட்டிக்கொண்டார்கள். அதன்படியே-எல்லா ஸ்தாவர சொத்துக்களும் போக்குவரத்து சாதனங்களும் தொழிலாளர் கையிலே ஆதிக்கத்திலேயிருத்தல் வேண்டும் என்ற தீர்மானம் பிரேரேபிக்கப் பட்டபொழுது அதை எதிர்த்து இவர்கள், விவசாயிகள், சொத்துரிமை, குடிசைத் தொழில், குறைந்த வட்டிக்குப் பண உதவியளித்தல் என்ற தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள். ஆனால் இவர்களுடைய தீர்மானம் 30-க்கு 4 ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது.

இந்த மகாநாட்டுக்குப் பின்னால் பிரிட்டிஷ் டிரேட்யூனியன்கள் தளர்ச்சியுற்றதாகக் காணப்பட்டாலும் மார்க்ஸ் தன் உசம் ஒரு பலமான ஸ்தாபனம் இருப்பதாகவே கருதி வந்தார். ஜர்மன் மெம்பர்கள்மட்டும் 10000 ஹாலந்திலிருந்தும் ஸ்பெயினிலிருந்தும் பலர் சேர்ந்தனர். நேபில்ஸ்சமஷ்டி டிரேம் கமிட்டிக்குப் பின் இத்தாலியிலும் இந்த ஸ்தாபனங்கள் காணலாயின. டிரேட் யூனியன் ஸ்தாபனத்தின் கொள்கைகள் பிரான்சிலும் அமெரிக்காவிலும் பரவலாயின. நேஷனல் லேபர் யூனியன் 800000 மெம்பர் களைச் சேர்த்திருப்பதாகத் தெரிவித்தார்கள். 1869 ல் பிரேசில் கூடிய மகாநாட்டில் இந்த இயக்கத்தின் வளர்ச்சி எதிரொலிக்கப்பட்டது. இம் மகாநாட்டில் விவாதம் வெகுமும்முரமாக நடந்தது. பிரௌடன்கொள்கை மீண்டும் இம்மகாநாட்டில் தலையெடுக்க ஆரம்பித்தது. வாய்ப்போர் உண்டாயிற்று. எப்படியிருந்த போதிலும் பிரௌடன் கொள்கை 54-க்கு 4 ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது. இச்செய்தி ஹாலந்து டென்மார்க், ஸ்பெயின், இத்தாலி முதலிய இடங்களில் பரவலாயிற்று. சர்வ தேசியஸ்தாபனம் அங்கும் வளர்ச்சியடையலாயிற்று.

இதில் சேர்ந்த மெம்பர்களின் தொகை பத்திரிகைகளின் மூலமாக சர்வதேசிய சங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டுவந்தது. சீனாவில் பத்து லக்ஷக்கணக்கான பேர் அடங்கிய ஒரு இரகசிய ஸ்தாபனம் வளர்த்துவந்தார்கள்.

இவ்வளவு வெற்றிகளுக்கிடையே ஆங்காங்கு இடைறுகள் கஷ்டங்கள் பல தோன்றின. ஸ்விட்சர்லாந்திலுள்ள மெம்பர்களில் ஒருவர் ரஷ்யர். அவர் பெயர் மைக்கேல் பாகுனின். அவர் ஒரு கோபி. அராஜகவாதி. இவரை வெல்வது மார்க்ஸ்

க்கு மிகக்கஷ்டமாயிருந்தது. மார்க்ஸுக்கும் இவருக்கும் பெரிய தகராறு ஏற்பட்டுவந்தது. இந்தக் கொடிய போராட்டத்தால் சர்வதேசிய விவகாரங்கள் கவனிக்கப்படவில்லை. எதிர்வாதம் செய்வதில், அதுவரையிலாகாதிருந்த முறைகள் நன்றாகத் தப்பி, முழுதுதான் வெளியாயின. மார்க்ஸ் தாம் ஒப்புக்கொண்ட கொள்கைகளைப்பற்றி அதிகமாக விளக்கவில்லை. அவர் எதிர்க்கும் கொள்கைகளைபற்றி அதிகமாக விளக்கவில்லை. அவர் எதிர்க்கும் முறைகளைத்தான் விரிவாக விளக்கினார். இந்த முறைகளை தொடர்ச்சியாக கண்ணுற்ற கட்சியிலிருந்த பெரும்பாலோர் மனம் திரும்பினர்.

பாகுனினும் தமது பிடிவாதத்தை விட்டொழித்தார். "மார்க்ஸே நமது தலைவர்" என்றும் சொல்லலானார். தாம் மார்க்ஸின் சிஷ்யன் என்றும் கூறிக்கொண்டார். மார்க்ஸ் எழுதினை கேட்டடலை வஷ்ய பாஷையில் மொழி பெயர்க்க முயன்றார். ஆனால் முயற்சி பலிக்கவில்லை. அவரிடத்தில் ஆக்க வேலைக்கான எண்ணம் மிகக்குறைவு. அவர் பொதுவுடமையையும் நாஸ்திகத்தையும் பிரசாரம் செய்து வந்தார். அவரிடத்தில் அழிவு வேலைக்கான திட்டங்கள்தான் காண முடியும். பூட்சியின நோக்கமே ஆசாங்கத்தை கவிழ்த்து, ராணுவ ஆட்சியை பலாத்காரஆட்சியை அழித்துவிடவேண்டும் என பிரசாரம்செய்ய வேண்டும் என விரும்பினார். அப்படி செய்தால்தான் ராஜக வாதி கம்யூனிசம் தோன்றும் என்றும், முதலாளித்துவத்தை அழிக்கமுடியும் என்றும் கருதினார். பாகுனின், ஸ்பார்ஜீயா ஆகியவர்களைப் போன்ற தீவிரப்போர்வழிகள் எப்படி உயிர்த்தனர் என்றுகூட நினைக்கக் கூடும். அவிந்துபோன எரிமலையைபடேபோல்இன்றும் அவர்களது காரியங்கள் மக்களது கண்களுக்கு புலப்பட்டு வருகின்றன. ஸ்பார்ஜியோனின் பிரசங்கங்களை வாசிக்கிறவர்கள் என் அந்நாளில் அவர்கள் அவ்வளவுதீவிரமாகநடந்துகொண்டார் என நினைக்கக்கூடும். பாகுனின் புத்தகங்களை வாசிக்கும் ஒருவர், மூளைபலம் பொருந்திய மார்க்ஸையே எதிர்க்க இவருக்கு எப்படி செல்வாக்கு இருந்தது என்று சந்தேகிக்கக்கூடும். அவாது சக்தி, அவாது தோற்றத்திலே இருந்தது. அவரைஷியசிங்கமென்றே சொல்லவேண்டும். அவரது ஆர்வம் அளவிடமுடியாது. ஊக்கத்தையூட்டக் கூடிய வார்த்தைகள் சரமாரியாக அவாது வாயிலிலிருந்து வந்தன. உணர்ச்சி தும்ப ஆண்மையுடன் சொற்பொழிவாற்றிவந்தார். ஸ்தாபனத்தை நிறுவுவதில் அவர் திறமைசாலி. அவாது கோட்பாடுகள் நிச்சயமற்றதாயிருந்தாலும் அவர் அதை வெற்றிபெற முடிம்பதில் எடுத்துக்கொண்ட வைராக்கியம் மெச்சத்தகுந்தது.

மத நூல்கள்.

(சார்லஸ் T. கோர்ஹாம்)

மத நூல்கள் ஒரு விஞ்ஞான சாஸ்திரம் என்ற எண்ணம் ஒரு காலத்தில் இருந்து வந்தது; தற்போதும் இருக்கின்றது. ஆனால் ஆராய்வதற்குப் பொருள்களே இல்லாமலிருப்பதாலும், அனுமானிப்பவற்றைப் பரீக்ஷிக்கும் மார்க்கம் அனுவளவும் இல்லாததாலும் அது ஒரு விஞ்ஞான முறையாக எங்ஙனம் இருத்தல் முடியும்? எனினும் மத நூல்கள் தமக்கு உரிய பெருமையான லக்ஷணங்கள் என்று கூறிக்கொள்வன

ஸ்தாபனங்கள் நிறுவுதில் இவரிடம் சிறந்தகொள்கைகள் இருந்தன. அந்தக்கொள்கைகளுக்கும் அவரது பொதுவான கொள்கைகளுக்கும் முரண்பாடுகள் பல இருந்தன. ஆனால் நடைமுறையில் அவைகள் காணப்படவில்லை. அவைகள் ஒன்று, புரட்சி முடிந்ததும் அராசாங்கம் அழிக்கப்படவேண்டும். இரண்டாவது நாம் மனச்சாட்சியற்ற எதிரிகளை எதிர்த்து வருகிறோமாதலால் கொலை செய்வது கொள்ளையடிப்பது ஆகிய சகல முறைகளையும் கைக்கொள்ளவேண்டும். இதை நாம் கைக்கொள்ளத்தயங்கினால், நம்மை எதிரிகளின்கொள்கைகளை ஒப்புக்கொண்டவர்களாவோம். மூன்றாவது, ஒரு புதிய சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கு உயர்ந்த லட்சியத்தைக்கொண்ட ஒழுக்க முடையவர்களால் போராட வேண்டும். அவர்கள் இந்த லட்சியத்திற்காக எதையும் தியாகம் செய்ய தயாராயிருக்கவேண்டும். எதிர்பேசாமல் கண்மூடித்தனமாக இட்ட கட்டளைகளை பின்பற்றவேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் பின்னடைதல் கூடாது. தங்களுடைய நோக்கத்துக்கு சாதகமான எவரையும் தம்மோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். பிரசாரத்தில் தேர்ச்சியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும் ஒட்டு சேகரிப்பதில், எதிரிகளை ஏய்ப்பதில், உருமாறிச் செல்லுவதில், அரசியல் அமைப்பு கற்பிப்பதில் சமர்த்தர்களாயிருக்கவேண்டும். இதில் முதல் இரண்டு கோட்பாடுகள் மார்க்ஸுக்கும் ஏஞ்சல்ஸுக்கும் முரணாயிருந்தன.

வற்றை நாம் பகுத்தறிவு கொண்டு ஆராய்ச்சி செய்தற்கு இயலும்.

நாகரீக தேசங்களுக்கு (அவைகளில் பெரும்பாலும் அகே கம் கிறிஸ்தவ மதத்தையே பெயரளவில் அனுஷ்டித்து வருகின்றன) யூதர்களால் எழுதப்பட்ட நூல்களைத் தொகுத்து பைபிள் என்ற பேர் சூட்டி அதை தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்து வைத்துக்கொண்டிருத்தலே இன்றைய கிறிஸ்து மத வேதமாகும். இந்த நூலின் பொருள்களைப் பற்றி ஏராளமான தப்பபிப்பிராயங்களும், தப்பெண்ணங்களும் உலாவி வருகின்றன. கிறிஸ்து மதஸ்தர்கள் இன்னும் உலகிற்குச் சரிவர தாம்மேற்கொண்ட காரியமாகிய அந்நூலின் தோற்றம், பொருள் முதலியவற்றைச்சரிவர விளக்கஞ் செய்திலர். ஒவ்வொரு கிறிஸ்தவக் கூட்டத்தாரும், இந்தமிகவும் முக்கியமான தமது கடமையை சதாகாலமும் கழுவிட்டுக்கொண்டும், நாசம் செய்து கொண்டுமே வந்துள்ளார்கள் என்பதைக்காணலாம். இதற்குகாரணம் என்னவென்றுநிச்சயமாகச் சொல்லொணாதபடி அவ்வளவு சந்தேகத்திலும், குழப்பத்திலும் கிறிஸ்தவ ஆசிரியர்களே விஷயங்களை விட்டுப்போயுள்ளனர். மதநூல்களின் முன்னேற்றத்திற்கே தடைகிறிஸ்து மத விசாரணைக்காரரே என்பதைக்காட்டும் பொருட்டு சில விஷயங்களைக் கீழே எடுத்துக்காட்டுவாம்.

1753-வது வருடம் "உலக உற்பத்தி" என்பதைப்பற்றி பிரான்ஸ் தேசத்து மருத்துவரில் ஒருவராகிய "ஆஸ்ட்ரக்" என்பவரால் ஒரு நூல் எழுதப்பட்டது. அது முதன் முதலில் கேவலமாக மதிக்கப்பட்டும், வெறுக்கப்பட்டும் வந்த போதிலும் கடைசியாக பைபிள் ஆராய்ச்சி விஷயத்தில் அது ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணிவிட்டது. பைபிளினது சரித்திரக்குறைபாடுகளைச் சந்தேகித்து அவர் அந்நூலில் பலதிறப்பட்ட ஆசிரியர்களைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்தார். அதைப் பல கிறிஸ்தவ வேத வல்லுநர்களும் ஒத்துக் கொண்டே இருக்கிறார்கள். "உயர்தர ஆராய்ச்சி" முறையை முதன் முதலில் உண்டாக்கியவர் ஆஸ்ட்ரக் என்பவரே. ஆனால் ஜர்மனி தேசத்து "ஈஹார்ன்" என்பவர் தனக்குஏற்பட்ட வசவுகளையும், கெட்டபேரையும் பொருட்படுத்தாமல், ஆஸ்ட்ரக் என்பவரது முடிவுகளை உறுதிப்படுத்தினார். மேயன்ஸ் என்னும் ஓர் ஊரில் இருந்த ஹ்ப்ரு, கிரேக்கஎனுமிரு மொழியினும் வல்லதொரு கத்தோலிக்க குருவானவர் சில வேத வாக்கியங்களது உண்மையான தத்துவத்தை எடுத்துரைத்தார். ஆனால் – உடனே அவரது நூலைப்பறி

மூதல் செய்தது மட்டுமின்றி அவரையும் சிறையில் அடைத்து விட்டனர். அவர் சிறையைவிட்டுத் தப்பி யோடியும் மீண்டும் அவரைப்பிடித்து அடைத்து வைத் தனர். பின் போப்பின் கட்டளைக்குப் பயந்து அவர் தான் கூறியது தவறு என்று மன்னிப்புக்கேட்டுக் கொண்டனர். அதன் பின் அவர் இறக்கும்வரை அமைதி யாகவே காலங்கழித்தனர். "கடவுள் வெறி பிடித்தவர்" எனக்கூறப்படும் "ஸ்பைனோசா" என்பவர் கூட யூதர்களால் வெளிப்படையாகத் திட்டப்பட்டும் அவர்களது திருச்சபை யிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டும், கிறிஸ்துவர்களால் "கிறிஸ்துவின் பகைவன்" என்று கருதப்பட்டும் வந்தார். "போசுவே" என்பவரின் தூண்டுதலின்பேரில் "ரிச்சார்டு சைமன்" என்பவர்பைபிள் ஆராய்ச்சி என்பதைப்பற்றி எழுதி யிருந்த நூலைப்பறி முதல் செய்தும் அதன் முதல் வெளியீட் டைத் தீயிட்டுக்கொளுத்தியும் விட்டனர். "பாட்டுக் கெல் லாம் பாட்டு" என்று கருதப்பட்டதின் ஆன்ம ரகசியப் பொருள்களை மறுத்து அது ஒரு ஹீப்ருக் கவி என்று "ஹெர்டர்" என்பவர் எடுத்துக்காட்டினார். உடனே அவர் வேறொரு தேசத்தில் தஞ்சம் புக நேர்ந்தது. இதே போன்ற குற்றத்திற்கு "காஸ்டெல்லியோ" என்பவரைப்பட்டினி கிடக் கவும், இறந்துபடவும் புராட்டஸ்டாண்டு மதத்தினர் தூண் டுதலளித்தனர். ஸ்பெயின் அரசனான பிலிப் என்பவன், பக்தி யும் அறிவும் மிகுந்த "லூயி டிலியான்" என்பவரைப் பரி சோதனை ஆலயத்தின் பயங்கரமானதொரு சிறைச்சாலை யில் ஐந்து ஆண்டுகள் அடைத்துவைத்திருந்தான். பத் தொன்பதாம் நூற்றாண்டிற்கூட "டிவெட்" என்னும் மத நூலாசிரியர் ஒருவர் தான் எழுதிய "புதிய வேதத்திற்கு ஒரு விளக்கவுரை" என்றநூலுக்காகத்தனதுபிறந்த காட்டை விட்டு போய்விட நேர்ந்தது. கத்தோலிக்கப் புரோகிதராகிய "அலெக்ஸாண்டர் வீட்ஸ்" என்பவர் "பரிசுத்த ஆவியையே நிந்தித்த முயலும் பதரே" என்று கேவலப்படுத்தப்பட்டு வந் தார். அமெரிக்காவிலே "தியடோர்" பார்க்கர் என்பவர் "டி வெட்" என்பவரது நூலை மொழி பெயர்த்ததற்காகவும் அவர் எழுதிய மத சம்பந்தமான கட்டுரைகளுக்காகவும் மிகப் பெரிய கெட்டபேர் வாங்க நேர்ந்தது. பத்தொன்பதாம் நூற் றாண்டில்கூட இன்னும்பல கல்வியும், அறிவும் வாய்ந்த பெரிய வர்கள் வசவு மொழிகளால் சூழப்பட்டும் வதைக்கப்பட்டும் வந்தனர். வைதீகர்கள் தமது தோழர்கள் செய்யும் வகை

யற்ற தொண்டைக்கண்டு வெட்கப்படாமலிருப்பதைக் காண ஆச்சரியமாயிருக்கின்றது.

வைதீகர்களது பகுத்தறிவற்ற மனப்பான்மையை விளக்க இன்னும் ஒரேயொரு உதாரணம் கொடுப்போம். மதநூற் பைத்தியம் 1861-வது ஆண்டு மிகக்கொடியதாக விளங்கி வந்தது. ஒருசமயம் ஆக்ஸ்போர்டிலே உபந்யாசம் செய்யும் போது, கர்வமிக்க பிடிவாதக்காரராகிய டீன்பர்கன் என்பவர் பின்வரும் ஆபாசத்தைக் கக்கினார். ஊழிக்காலமொழி என்பது பைபிளே ஆகும். வானுலகம் திறந்து கடவுள் நம்மிடம் தனது சொந்தக்குரலில் பேசினால் எதைப்பேசுவாரோ அதே வார்த்தைகள் தான் நம் "பைபிள்." ஒவ்வொரு பாகமும், முழுவதும் ஒரே விதமாகவுமே அருள்பெற்றுள்ளது. அருள் என்பது அளவில் வேறுபட்டதல்ல; அது தன்மையிலே வேறுபட்டது. கடவுளது தூய்மையான அருள், பைபிளில் சொட்டிவருகின்றது. அவ்வருள் அதன் எல்லாப் பாகங்களிலும், எல்லா வார்த்தைகளிலும், எல்லா எழுத்துக்களிலுமே ததும்புகின்றது-" இதைக் கூறியவர் ஒரு முட்டாள் கழுதையல்ல. அவர் ஒரு கல்விபயின்ற மனிதன்தான். எனினும் அவர் ஒரு அறிவற்ற கொள்கைக்கு அடிமைப்பட்டவராவர்.

சீக்கிரம் பகுத்தறிவு தன் கூறிய முனையால் அறுக்க முற்பட்டது. 1829-வது வருடம் "டீன் மில்மன்" என்பவர் தனது "யூதர்களின் சரிதம்" என்னும் நூலை வெளியிடவே அதனால் ஏராளமான எதிர்ப்புகள் ஏற்படலாயிற்று. அப்புத்தகத்தில் யூதர்கள் மிகவும் "விசேஷமான மக்கள்" என்னும் கருத்தை அடியோடு தாக்கி அவர்களும் ஒரு சாதாரண கீழ்ப்பிரதேச மக்கள் என்று வர்ணிக்கப்பட்டிருந்தது. ஒரு "குடும்ப புத்தக நிலையத்தில் அந்த நூல் கிடந்தது. அதைப்பறிமுதல் செய்து அதற்கு மேல் அதை அச்சிடக் கூடாதெனவும் ஆக்ஞையிடப்பட்டது. அக்காலம் சித்திரவதைக்கு ஏற்றதல்ல. ஆதலால் அதை விடுத்து மில்மன் என்பவர்க்கு அவர் எவ்வளவு தகுதி வாய்ந்தவராயிருப்பினும், எல்லா நன்மையையும் மறுத்து தண்பம் விளைவிக்கலாயினர். அவர் பின் எழுதியுள்ள "லத்தீன் தேசத்தின் கிறிஸ்து மதச் சரிதம்" என்னும் புத்தகத்தில் விலையுயர்ந்த விஷயங்கள் அடங்கிருப்பதால் அதை ஒவ்வொருவரும் படித்தல் அவசியம். அந்நூல் ஒன்பது அதிகாரங்களுள் அடங்கி இருக்கின்றது.

1860-வது வருடப் பிரபல்யமான "கட்டுரைகளும் ஆராச்சியுரைகளும்" என்பது தோன்றிற்று. உடனே மதாசாரியார்களது கோபாக்கினி கிளம்பி, வசவுக்கணிகளை வறண்டுபோகும்படி பாய்ச்சினர். "டார்வின்" கொள்கையைத்தாக்கி, பிஷப் வில்பர்போஸ் என்பவர் ஆக்ஸ்போர்டில் பேசியதற்கு மறுமொழி, "ஹக்ஸ்லி" எனபவர் தக்கவாறு கொடுத்தார். அதன்பின் "குவார்ட்டர்லி ரெவ்யூ" என்னும் சஞ்சிகையில் அந்த பிஷப் ஒரு வியாசம் வெளியிடவே அதனால் புயல்காற்று போன்ற மறுப்புகள் கிளம்பலாயின. கோவிற் கூட்டத்தார் பலருக்கு ஆவேசம் கிளம்பிற்று. ஆர்ச்டீக்கன். டெனிசன் என்பவர், அந்நூல் இளைஞர் படிப்பின் அவர்களை நரகத்திற் புகுத்திவிடும் என்றும் தான் கைவைத்த நூல்கள் அனைத்துள்ளும் அதுவே மிகத்தியது எனவும், பெயின் என்பவரது "பகுத்தறிவின் காலம்" என்னும் நூலின் விஷயத்தை முழுதும் தன்வயம் கொண்டிருப்பதோடல்லாமல் அந்நூல் ஒரு மதக்குருவால் எழுதப்பட்டிருப்பதால் இன்னும் அதிகத்தீங்கு விளைக்கும்பாற்றது எனவும் கதறியழுதனர். டாக்டர் வில்லியம்ஸ், வில்சன் என்னும் இரண்டுபேர்கள் தாம் எழுதியதற்காகச் சந்தேகிக்கப்பட்டு நீதிஸ்தலத்திலும் விசாரணைக்குக்கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் பிரிவு கௌன்சில் நீதிபதிகள் வில்சன் என்பவர் "ஊழித்தண்டனை" என்பதைச் சந்தேகித்தது சட்டப்படி குற்றமல்லவென்று தீர்ப்புக் கூறிவிட்டனர். இந்தத் தீர்ப்பை ஆர்ச். பிஷப்புகள் பலர் எதிர்த்தனர். ஒரு வேடிக்கைக்காரர் கூறியபடி அந்தத் தீர்ப்பானது வாதியாகிய "நரகத்தை" "வியாஜ்யத்தொகையைக் கொடுக்கும்படி செய்ததோடு தனது கட்சியும் தோற்கும்படியும் செய்துவிட்டது. மேற்கூறிய நூலைக்கண்டித்து பதினோராயிரம் குருக்கள்மார்களது கையொப்பமிட்ட கண்டனம் ஒன்று வெளிப்படுத்தப் பட்டது. மதசபையும் அதை மதவிரோதமான நூல்என்றும் தீர்மானித்தது. லண்டன் பிஷப்பாயிருந்த டாக்டர் "டெயிட்" என்பவர் நீதிஸ்தலத்தில் ஒரு அங்கம் வகித்திருந்த காலையில் அந்தத்தீர்ப்பில் விரோதமாகக் செய்யும்படி அவரை டாக்டர் "பூஸி" முதலியோர் கேட்டுக் கொண்டும் அவர் அதைச்சட்டை பண்ணவே இல்லை. டாக்டர் "டெயிட்" என்பவரது கொள்கையே முதலில் அனைவனதாய்த்தான் இருந்தது. ஆனால் டாக்டர் டெம்பிள் என்பவரே தன்னைப் பகுத்தறிவைக்கொண்டு பைபிளைப் பாடிக்கும்படி முன்பொருநாள் அறிவுறுத்தியதை ஞாபகமூட்

டினார். பின்னும் அவர் கூறியதாவது: "ஒருவனை ஒரு பொருளைப் படிக்கச் சொல்லுவதும் அவ்வாறு அவன் படித்தபின் அதைப்படித்தே அறியாத மக்கள் கொண்டுள்ள மூடவுக்கே வரவேண்டும் எனக்கட்டாயப்படுத்துவதும், அவனைக் கேலி செய்வதை யொக்கும். முன்னாலேயே முடிவைக் கூறிவிட்டால் படிக்கவேண்டிய அவசியமே இல்லாமற்போய்விடுகின்றது. "டெயிட்டுக்கு" அவர் எழுதிய மற்றொரு கடிதத்தில் "அருளால் உண்டான வார்த்தைகள் என்பதைக்காட்டிலும் மோசமானதொரு மூடநம்பிக்கை என்ன இருக்க முடியும்?" என்று கேட்கிறார். பெரும்பாலான அர்ச்சகர்கள் (பாதிரிகள்) தம் மூட நம்பிக்கையின்மேல் அட்டைபோல் ஒட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

"கட்டுரைகளும் ஆராய்ச்சியுரைகளும்" என்னும் நூல் இழைத்த குழப்பம் அடங்கிய சில நாட்களுக்குள் மற்றொரு குழப்பம் இங்கிலாந்து திருச்சபையின் மக்களைப் பைத்தியக்காரர்களாக்கிவிட்டது. அதற்குக் காரணம் 1862-வது ஆண்டில் நேட்டால் பிஷப்பான "ஜான் வில்லியம் கொலென்சோ" என்பவர் "பெண்டாச்சோவும் யோசுவாவின் புத்தகமும் ஆராய்ச்சிசெய்தல்" என்னும் நூலின் முதற்பாகம் வெளிவந்ததேயாகும். இந்த மிகவும் உன்னதமான நூலைப்பற்றி ஆசிரியர் 'ஓயிட்' என்பவர் பின்வருமாறு கூறுகிறார். "இதன் ஆசிரியர் இதற்குமுன் கேம்பிரிட்ஜில் உபாத்தியாயர் என்றும் ஹேரோவில் கெட்டிக்காரர் என்றும், கணித நூல்கள் பலவியற்றியவர் என்றும் கருதப்பட்டு வந்தனர். அவர் வைதீகர்களது கட்டுப்பாட்டிற்கடங்கிய ஆராய்ச்சி முறைகளைச் செய்து வந்த வரைக்கும் அவருக்கு மேன்மைக்கும் செல்வாக்கிற்கும் குறைவில்லை. ஆனால் அவர் பிற்காலத்தில் அவ்வழி செல்லவில்லை. அவர் எவ்வளவோ பயபக்தியோடு ஆராய முயன்று எழுதிய பெண்டாடூச் என்னும் நூல், பலநல்ல விஷயங்களைத் தன்வயம் கொண்டிருப்பினும் அது சரித்திரத் தன்மைக்கு விரோதமானது என்னும் முடிவுக்கு வராமல் இருக்க முடியவில்லை. அம்முடிவு தற்காலம் சாதாரணமாக எல்லாரும் கொள்ளுவதேயானாலும் அக்காலத்தில் அது தைரிய மிருந்தாலொழிய ஒருவராலும் கொள்ளத்தக்கதல்ல. மற்றும் அந்நூலில் பெரும்பாகம் வெகு சமீபகாலத்திய யூதர்களது சரித்திர சம்மந்தமான தென்றும் கண்டுபிடித்தார். "டியூடெரானமியில்" பெரும்பாகம் யூதர்கள் கானான் என்னுமிடத்தில் நிலைத்த பிற்பாடேதான் எழுதப்பட்டிருக்கவேண்டும் எனவும், மோசேயின் சட்டம் 'பிடிபடுவதுக்கு' முன் அழி-

லில் இருந்ததில்லை எனவும், 'கிரானிக்கிள்ஸ்' என்னும் புத்தகம் புரோகிதர்களால் தமக்கு ஆதரவிற்காகப் பிற்காலத்தில் எழுதப்பட்டதெனவும், பொதுவாக எல்லாப் புத்தகங்களிலும் பாட்டிக்கதைகளும் பழங்கதைகளும் பொதிந்து கிடக்கின்றன எனவும் முடிவுக்கு வந்தார். அவ்வாசிரியர் கொலென்ஸோ என்பவரது கொள்கைகளை நீண்டகாலம் வரை வசவுமொழி என்னும் பதிலால்மட்டுமே மறுத்து வாலாயினர் அவர் தனது மேல்பதவிக்காரரான கேப்டவுன் பிஷப்பால் மதப்பிரஷ்டம் செய்யப்பட்டு சாத்தானிடம் ஒப்புவிக்கப்பட்டுவிட்டார். அவரது புத்தகத்தை குருமார்கூட்டம் கண்டித்தது. அதற்கு ஆதரவளித்தவரது வருவாயை நிறுத்திவிட்டனர். வெஸ்ட் மின்ஸ்டர் கோவிலில் பீடம் திருத்தப்படும் காலையில் கோலென்ஸோ என்பவரைப்பார்த்து வில்பர்போர்ஸ் என்னும் பிஷப் கூறியதாவது: "உன்னுடைய எல்லாவற்றையும் கடவுளுக்காக விட்டுவிட நீ துணிந்திருத்தல் வேண்டும். மனிதனது பயமுறுத்தலுக்கும் சாத்தானின் கோபத்திற்கும் அஞ்சாமல் உண்மையையும் அதை ஆதரிப்போரையுமே நீ காடி நிற்றல்வேண்டும். நீ மிகப்பெரிய பொறுமையையும் நிதானத்தையும் கொண்டு சாத்தான் உன்னைத் திட்டும் வசவுகளையும் தூற்றும் வார்த்தைகளையும் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். நீ உண்மை பத்தனாயிருப்பதாகத் தெரிந்தால், உன்னைச் சுட்டெரிக்கவும், முடியுமானால் இன்னும்பலவும் செய்தற்கு விரும்பும் சாத்தான் தினந்தோறும் ஏமாறுபவர்கள் மூலமாகவும் ஏமாறியவர்கள் மூலமாகவும் எழுதப்படும், பேசப்படும் அவதூறு மொழிகளால் உன்னைத்தாக்கியேவரும். அவர்கள் கிறிஸ்துவின பக்தர்கள்போல் நடித்து உனது கருத்தை வேறாகக் கழறுவர், உனது குறைகளைக் கண்டு கொம்மாளம் போடுவர். உனது குற்றங்களை மிகைப்படக் கூறுவர். மற்றும் தம் ஒவ்வொரு சக்தியையும் உபயோகித்துத் தனது விஷக் காற்றின் வேகத்தால் உனது தொண்டோற்றும் சக்தியைத் தொலைக்க முயலுவர்."

தனே, கிறிஸ்துவர்கள் அன்பின் வழியை இவர் காட்டியது மிகச் சரியானதே. ஆனால் அப்புத்திமதியின்படி கொலென்ஸோ என்பவர் நடந்து காட்டினார். வில்பர்போர்ஸ் என்பரோ அதை முற்றிலும் மறந்து விட்டதும் அன்னியில் கொலென்ஸோவை மிகக் கொடுமைப்படுத்தியவர்களிலும் ஒருவரானார்.

மத ஆவேசக்காரர்களுக்கு மற்றும் பல தோல்விகள்

ஏற்படலாயின. கொலென்ஸோ என்பவர் கோர்ட்டுக்குப் போய் வெற்றியும் அடைந்தார். அந்த வழக்கு விசாரணையில் இருந்த காலையில் அவரைத் தோற்கடிக்கவும் அவருக்கு அனுகூலமாக இருந்தவர்களுக்கு ஏழ்மைத் தண்டனை விதிக்கவும் பல பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்தன. அவருக்கு விரோதமாக கட்சி தயார் செய்த தலைவர்களுள் கிளாட்ஸ்டன் என்பவரும் ஒருவரே. மத ஆக்ரோஷத்தின் சக்தி அங்கிலமையிலிருந்தது. பிரிவுக் கவுன்சிலிலும் ரோல்ஸ் கோர்ட்டிலும் கொலென்ஸோ பக்கமே தீர்ப்பு ஆய்விட்டபடியால் அவரது மாதச் சம்பளமும் பாதுகாக்கப்பட்டது. அவரது மதப்பிரஷ்டமும் பயனற்றதாயிற்று. பிஷப் "க்ரே" என்பவருக்கு அது திருப்தியளிக்க வில்லையாகையால் அவர் இந்த முடிவைப் பயங்கரமானதெனவும் அத் தீர்ப்புச் சொல்லிய பிரிவுகவுன்சிலை தலைசிறந்த சாத்தானின் அம்சம் என்றும் கூறி நொந்தார். இவர்தான் மக்களால் "கேப்டவுணின் சிங்கம்" என்று அழைக்கப்பட்டு வந்தவர். ஒருக்கால் அவரது தோலைப் பார்த்து மக்கள் ஏமாந்து விட்டனர் போலும்! அதற்கப்புறமாவது கொலென்ஸோ என்பவர் அமைதியோடு வாழ முடிந்ததா? பாபம்! அது கொஞ்சங்கூட முடியவில்லை. அவருக்கு முன்னிருந்த லையல் என்பவரைப்போல் அவர் சமூகத்தால் வெறுக்கப்பட்டு வந்தார். அவரோடு சரிபான பனிதர் சகவாசம் செய்தலே தவறு என்று தள்ளினர். அவரது வேலையாட்களும் கிலேசத்துடன் அவரைவிட்டு ஓடிவிட்டனர். மாரிஸ் என்ற மற்றொரு மத விரோதிக்கு இவர் முன்பு உதவி புரிந்திருந்தனர். அவருங்கூட இவரைக் கைவிட்டுவிட்டார். அன்பும அறிவுமிக்க மத்தேயு ஆர்னால்ட் என்னும் ஆசிரியர்கூட இவரைப் 'பிஷப்புப்பறையர்' என்று பரிகசித்துத் தாக்கலுற்றார். ஆனால் இதற்கெல்லாம் அஞ்சாது கொலென்ஸோ என்பவர், தான் மேற்கொண்ட பணியைச் செய்துகொண்டே வந்தார். அவரது மத நூலைக் காட்டிலும் மக்கள் மனத்தைக் கட்டுப்படுத்திய நூல் வேறெதுவும் இல்லவேயில்லை. இத்தகைய கொள்கையைப் பின்பற்றும் மக்கள் பைபிளின் அருள் வாக்கில் நம்பிக்கை கொண்டிருத்தல் என்பது எவ்வாறு முடியும்? தற்காலத்திலோ அதே மக்கள் இன்னும் தைரியமாக அக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முற்படுவார்கள் என்பது நிச்சயம்.

1864-வது ஆண்டில் டாக்டர் சாமுவேல் 'டேவிட்சன்' என்பவர் பழைய வேதத்திற்கு ஒரு முன்னுரை எழுதி வெளி

விட்டார். வழக்கமாக வரக்கூடிய எதிர்ப்புப் புயல் அடித்தது; அவரும் ஆசிரியர் பீடத்திலிருந்து அகற்றப்பட்டார். சீனான் என்பவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைச் சரிதையை எழுதியற்காக அவரும் அதேமாதிரி வேலையின்றும் நீக்கப்பட்டுவிட்டார். லாய்ஸி என்னும் சந்நியாசி ஒருவர் ஆசிரியர் பீடத்திலிருந்தும் சர்வகலாசாலையினின்றும் அகற்றப்பட்டார். வெறுக்கப்படினும், வெகு கண்ணியமான தியடோர் பார்க்கர் என்பவரை அமெரிக்கன் யூனிட்டேரியன் திருச்சபையிலிருந்து விலக்கிவிட்டார்கள். மற்றும் தம் மதக்காரர்களது தூண்டுகோளினால் பல பிரபல ஜர்மனி தேசத்து அறிஞர்கள் அதேபோன்ற தண்டனைக்கும் துன்பங்கட்கும் ஆளாயினர்.

மேற்கூறிய மத விவாதத்திற்குப் பின் மத நூல் முன்னேற்றம் அடைந்ததைப்பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. அதகைய முன்னேற்றம் நீடித்ததாயிருந்திருப்பதன்னியில், மூட நம்பிக்கையைத் துரத்தியடித்து பகுத்தறிவு வெற்றி பெறும் பாற்றதாகவே இருந்துவந்துள்ளது. ஒவ்வொருகாலும் வைதீகக்கிறிஸ்துவர்கள் தமது கோட்டையைப்பகுத்தறிவுக்கும் ஞானத்துக்கும் பயந்துவிட்டோடும் கதையே எங்கும் இருந்து வருகின்றது. இத்தகைய முன்னேற்றத்திற்குக் காரணஸ்தர்களுள் அறிவோடு உண்மை காடும் அவாவும் கொண்ட பல மதக்குருக்களே யாவர்கள். ஆனால் இவர்கள் பொதுவாக இருக்கக்கூடிய புரோகிதக் கூட்டங்களினின்றும் மாறுபட்ட ஒரு சிலரே யாவர். இவர்கள்கூடத் தமது சத்தியத்திற்கும் சமூகத்தின் வழங்கத்திற்கும் கட்டுப்பட்டேதான் ஆகவேண்டியிருக்கின்றது. முன்னேற்ற காட்டங்கொண்ட. ஒரு சிலர் இருத்தலால், பழங் கொள்கைகளனைத்தையும் கிறிஸ்தவ அறிவாளிகளுள் பலர் கைகழுவ விட்டுக்கொண்டே வருகின்றார்கள். "வேதத்தின் வாக்கே மக்களின் சக்தியினும் வெகு சிறந்தது" என்ற அகஸ்டைன் கூற்றில் கம்பிக்கை இருந்த அக்காலத்தில் மனிதர்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள் அவ்வளவு ஆழமாய்த் தற்காலத்திய சாதாரண மக்களிடம் கிடையாது என்னலாம். அவைகளின் சிறு சிறு பாகங்களே இப்போது மக்களிடம் காணப்படுகின்றன.

மத ஆவேசம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிதீவிரமாக இருந்துள்ளது போலும். ஏனெனில் அப்போதுதான் வைதீகக்கோஷ்டியில் குழப்பங்கள் அதிகம் உண்டாகியுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது 1846-லிருந்து 1894-வரை இருந்த புரோபசர் "வில்லியம் ராபர்ட்

ஸன் ஸ்மித்'' என்பவருடைய விஷயமாகும். அவர் அளவு கடந்த கல்வியினர். அவருக்குப் பலமொழிப் பயிற்சியும் ரசாயன சாஸ்திரமும், அனுபவமும், சரித்திரமும் தெரியும் அவர் ஒரு பெரிய பைபிள் ஆராய்ச்சியாளர். பிரிட்டனின் விஷய அகராதியின் ஒன்பதாவது பதிப்பின் ஆசிரியராக இருந்து வந்த தன்னியில், ஆபர்டன் ப்ரீசர்ச் கல்லூரியில் கீழ்நாட்டு மொழியாசிரியராகவும், பழைய வேத விற்பன்னராயும் இருந்தார் அவர் ''பிரிட்டானிக்கா''வில் பைபிளைப்பற்றி எழுதிய கட்டுரைகள் மிகவும் பெரிய மறுப்புகளைக் கிளப்பி விட்டன. மற்றும் 881-வது வருடம் அவர் அந்த ஆசிரியர் பதவியினிருந்து நீக்கப்பட்ட தன்னியில் அவர் மதத்துவேஷத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டும் விசாரிக்கப்பட்டார். ஆனால் இறுதியில் விடுவிக்கப் பட்டார். அவர் ஒரு மிகச்சிறந்த குணத்தையுடையவர். அவர் எப்போதும் அன்பும், இன்பச்சொல்லும் அளவுகடந்த பச்சாதாபமும் உடையவர். அவர் பேசும் திறம் பெரிதும் பெற்றவர். எனினும் வைதீக மார்க்கத்தினின்றும் விலகி விட்டதினால் அவரது நித்தகைய கற்குணங்கள் கூட கவனிக்கப்படாது போய்விட்டன. ''ராபர்ட்சன் ஸ்மித்'' என்பவர் 1889-லிருந்து தான் இறக்கும் வரையில் கேம்பிரிட்ஜில் அரபி மொழி போதிக்கும் ஆடம்ஸ் ஆசிரியராக இருந்து வந்தார் என்னும் செய்தி அனைவருக்கும் இன்பம் அளிப்பதேயாகும்.

சென்ற ஐம்பது வருட காலமாக தற்கால ஆராய்ச்சிகளில் சிலவற்றையேனும் மேற்கொள்ளும் மதக்குருக்கள்மார்களிடம் எல்லாக்கிறிஸ்தவ மதப்பிரிவினராலும் அதிருப்தியானது காட்டப்பட்டு வருகின்றது. வைதீகத்தின் வரம்புகடந்த கண்ணியர் பொருந்தியவர்கள் கூட ஏமாற்றுபவர்கள் விரோதிகள், மதத்துரோகிகள் என்னும் வசவு மொழிக்குப் பாத்திரமாகியுள்ளனர். திருச்சபைகள் தற்கால ஆராய்ச்சியைப் பின்பற்றும் தம் மக்களது உண்மை உணர்ச்சியையாவது அல்லது தமது வைதீகக் கொள்கைகளின் தீமைகளையாவது இன்னும் சரிவர உணர்ந்ததில் நல்லெண்ணம் என்பது மட்டும் இருந்தால் போதாது. நல்லறிவு என்பதும் அவசியம் வேண்டும். பகுத்தறிவற்ற நல்லெண்ணம் என்பதும் தினந்தோறும் காம் காணும் காக்ஷியே. நல்ல எண்ணத்தையும் நாம் நன்கு கருதவேண்டியது அவசியமே. மத விவாதங்கள் நடத்துபவர்கள் உயிர்ச்சேதம் இல்லாமலும் அபாசவார்த்தைகளை உபயோகிக்காமலும் இருத்தலே உத்தமம். இது தற்காலமும் கடக்க ஏதுவாகின்றது. அதற்குக் காரணம் ''யதேச்

சா சிந்தனைக்காரர்களது (Freethinkers) தைரியமான கொள்கைகளும், மதத்தின் அளகாரத்தை ஒரு பக்கமும் பகுத் தறிவின் கொள்கையை மற்றொரு பக்கமும் கொண்டுவரும் கிறிஸ்தவ அறிஞர்களது வாழ்க்கை முறையுமேயாகும். வைதீகக் கிறிஸ்து மதம் பகுத்தறிவற்ற தொரு கொள்கை மூட்டை. அது, மேலானதும் ஆனால் அளவுக்கடங்கியது மான கடவுளையும், காணக்கூடியதையும் காணமுடியாததை யும் உண்டாக்கச் சக்தியையுடையதும், தீயவைகளைச் சிருஷ் டியாததுமான கடவுளை வைத்துக்கொண்டிருக்கின்றது. அந் தக் கடவுள் மனிதன் கெடும்படியான வழிகளையும் உண்டு பண்ணுகின்றது. ஆனால் அந்தக்குற்றத்திற்கு மனிதனை கம்பமுடியாத அநீதியோடுந் தண்டிக்கிறது. அந்தக் கடவுள் தன்னை மக்களுக்கு அறிவித்துக்கொள்ளும் முறையோ பகுத் தறிவு படைத்த யாருக்கும் விளங்காததாகும். மதமானது இந்த ஒழுக்கமற்ற ஆபாசத்தை உபதேசித்து உலகத்தைக் காப்பாற்றுதல் முடியாதகாரியம். இருந்தாலும், காகரீகம் படைத்த மக்களது மனச்சாட்சிக்கே மாறுபட்டிருக்கும் இந்த முறையைக்கடவுளே சிருஷ்டித்தார் என்று, பெருவாரியான எண்ணிக்கையையுடைய மக்கள் தம் மடமையின் முதிர்ச்சி யால் மன்றாடிக் கொண்டாடிவருகின்றார்கள். அவர்கள் மீண் டும் சரித்திரத்திற்கு மாறாகத் தம் மதம்தான் மனிதவர்க்கம் முன்னேறுவதற்கு முக்கிய கருவியாயிருந்துள்ளது என்றும் கதறுகின்றார்கள்.

இன்னும் ஓரே ஒரு விஷயம். 1881-வது ஆண்டில் புதிய பைபிளின் பரிசோதிக்கப்பட்ட வாசகம் வெளிப்படுத்தப்பட் டது. முன்னூறு ஆண்டுகட்கு முன் முதலாவது ஜேம்ஸ் தோற்றுவித்த வாசகத்தைக்காட்டிலும் இது சந்தேகமில்லா மல் அதிக உண்மையானதே. அவ்வாறிருந்தும் இங்கிலாந் தில் அதை மக்கள் முழுவதும் இன்னும் ஒப்புக்கொள்ள வில்லை. பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படாத சில விஷயங்கள் இப்புதிய நூலில் எடுத்துவிட்டிருக்கின்றார் கள். ஆதலால் கிறிஸ்து மதக் கொள்கைகளில் பல, ஆதி அருள் வாக்கு ஒட்டியதாயிருத்தல் முடியாது. சிலர் பரிசோ தித்த வாசகத்தைப் படிக்கவே மறுக்கின்றார்கள். இதி லிருந்து அவர்கள், தற்கால ஆராய்ச்சியின் பயனாய் ஏற்பட் டுள்ள உண்மையைக் காட்டிலும் பழங்கால நம்பிக்கையிடம் அதிகப்பற்று வைத்திருக்கிறார்கள் என்றுதானே புலப்படுகின் றது. இந்தப்புதிய நூலும் உத்தமமானதென்று கூறுவதற் கில்லை. ஏனெனில் பழைய பிரதிகளே கிடைக்காததினால்

இந்து புராணங்கள்.

(எஸ். வி. எழுதுவது.)

நம்மவர்களில் பலர் தாங்கள் செய்யும் பல அர்த்தமற்ற காரியங்களைப் பற்றி மற்றவர்கள் வினாவினால் (பெரிய வக்கீல்கள் தங்கள் சட்டப்புத்தகத்திலிருந்து சட்டங்களைப் புரட்டிக் காண்பிப்பது போல்) இது அந்தப்புராணத்தில் வருகிறது, இந்த இதிகாசத்தில் வருகிறது, இதைப்பற்றிவிரோதமாகக்கேள்வி கேட்டால், மனதினால்கூடநரகம்சித்திக்கும்என்றபதில் சொல்லி விடுகிறார்கள். நன்றாக கல்வி கற்றவர்கள் கூட, புராணங்களின் ஊழல்களை நன்றாக அறிந்திருந்த போதிலும், அதைக்கேட்டு உண்மையில் நரகம் சித்திக்குமோ என்னும் ஐயப்பாடோடு தாங்கள் அதை மறுத்துக் கேட்கத் துணிவதில்லை. புராணம் என்பதன் உண்மையான பொருள் யாதெனில் பழங்கதை—பழைய புளுகு. புதுப்புளுகாக இருந்தால் கூட அதைப் புளுகென்று ஒருவராலும் கண்டுபிடிக்கமுடியாது. ஆனால் புராணங்களில் உள்ளவைகளோ பூராணமான பழம்புளுகுகள். யாவர் கண்ணுக்கும் பட்டப்பகல் வெட்ட வெளிச்சம்போல் தெரியக்கூடியது. இப் புராணங்கள் ஏற்பட்டதன் காரணத்தைப் பின்னால் ஆராய்வோம்.

வைஷ்ணவ சமயத்தார்களாலும், இன்னும் மற்ற பக்த கோடிகளாலும் போற்றப்படும் இராமாயணம் முதலியவைகளிலுள்ள ஆபாசங்களை எடுத்துக்காட்டுவதை யாவரும் அறிந்திருப்பீர்கள். மற்றும் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் சொல்லப்படும் மற்ற அவதாரங்களும் இராமாவதாரத்தைப் போல் பெரியபுளுகில் வந்து முடிகின்றது. அவற்றில் சிலவற்றை ஆராய்வோம்,

---

அது முற்றிலும் சரியாகவே இருக்கமுடியாது. ஆனால் மத்திபமாயிருப்பதை, இருப்பதற்குள் உத்தமமானதைக் காட்டிலும் அதிகமாக விரும்பின் அது அவனது பக்திச் சீர்கேடு என்றுதான் சொல்லவேண்டும். மற்றும் மதநூல்களின் பயனாய் கோவில்களிலே சந்திக்கும், பகுத்தறிவுக்கும், சரித்திரத்துக்கும் மாறுபாடான கோட்பாடுகள் மக்களுக்கு உணர்த்தப்பட்டு வருகின்றதும் தவிர, சாதாரணமானதும் ஆனால் மிகவும் அவசியமானதுமான ஒழுக்கப் போதனையும் கைவிடப்பட்டே வந்துள்ளது.

திருமால் எடுத்த முதல்அவதாரமாகிய மச்சாவதாரத்தை எடுத்துக் கொள்வோம். மச்சாவதாரம் எடுத்ததன் காரணம் அநேகமாக யாவருக்கும் தெரிந்திருக்கலாம். ஒரு காலத்தில் சிவபெருமான் பிரமாவிடம் நான்கு வேதங்களையும் அளித்ததாகவும், அவைகளை இரண்டு அசுரர்கள் கவர்ந்துபோய் சமுத்திரத்தின் அடியில் போய் ஒளிந்த கொண்டதாகவும், அதனால் பிரம்மாவுக்கு மூளை கலங்கிப்போய் சிருஷ்டித் தொழிலையே மறந்து விட்டதாகவும், இதைப்பார்த்த திருமால் மச்ச உருவம் எடுத்துச் சென்று அவ்வசுரர்களைக் கொன்று வேதங்களைக் கொண்டுவந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதை ஆராய்வோம். வேதம் தான் போய்விட்டதே. பிரம்மா என் வேறொன்று எழுதிக் கொள்ளக்கூடாது? இதை எழுத முடியவில்லையானால் (மெக்காலே என்றுசொல்லப்படும் ஆங்கிலக்கவியானவர்ஸில்டனால் செய்யப்பட்ட 13 புஸ்தகங் கொண்ட பாரடைஸ்லாஸ்டு என்னும் புத்தகம்காணாமல்போய் விட்டால் தன்னால்அதையேதிருப்பிஎழுதமுடியும்என்றுசொன்னாராம்) நான்கு புத்தகங்கள் கொண்ட வேதத்தைத் கடவுள், எல்லாம் வல்லவர் என்றுசொல்லப்படும் ஒருவால்எழுதமுடியவில்லை யானால் அவருக்கு மனிதனைவிட அதிக சக்தி எங்கே யிருக்கிறது? போனால் போகட்டும், சிவபிரான்தான் என் மற்றொன்று உண்டாக்கி யிருக்கக்கூடாது? அவர் தான் சர்வ வல்லமை யுள்ளவராச்சே. அவர் நினைத்தால் உடனே மற்றோர் வேதம் உண்டாக்கி யிருக்கமுடியாதோ? அழித்தலையுடைய திருமால் மச்சாவதாரம் எடுத்துத்தானோ அசுரர்களைக் கொல்ல முடியும்? என் தன் சர்வசக்தியுள்ள சக்rாயுதத்தை தான் இருந்த இடத்திலிருந்தே பிரயோகித்திருக்சலாகாது? அவ்வாறு செய்யச் சக்தி இல்லை போலும். சமுத்திரத்திற்குள் திருமாலாயிருந்த போதிலும் மீன் உருவம் கொண்டு தான் செல்லவேண்டும் போலும்! அசுரர்களைக் கொல்ல வஞ்சகமான உருவத்தோடு செல்வதில் தான் கடவுள் சக்தி நிறைந்திருந்ததுபோலும்! மற்றும் பிரம்மாதான் சிருஷ்டிக்கர்த்தராயிருப்பதோடு புராணங்களில் சிறப்பிக்கப்படும் மூன்று கடவுள்களில் ஒருவராக விளங்குகிறாரே அவர் என் அசுரர்கள் வேதங்களைத் திருடிக்கொண்டு செல்வார்கள் என்பதை முன்னாலேயே அறிந்து அவர்களைச் சிருஷ்டிக்காமலிருக்கலாகாது? அல்லது வேதங்களை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி இருக்கலாகாது? இவைகளை ஆராயப்புகின் இவர்களிடம் கடவுளிடன் சக்தி ஒன்றுமே இல்லை என்றே எற்படுகிறது. இவ்வாறு அவர்களிடம் இல்லாத ஒரு சக்தியை இருக்கிறது என்று சொல்லி ஏமாற்றுவதை விட 'முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது' வேறென்ன விருக்கிறது.

இனி அடுத்த அவதாரமாகிய கூர்மாவதாரத்தைக் கவனிப்போம். தேவர்களுக்கு அமிர்தம் அளித்து அவர்களுக்குச் சாகாவரம் அளிப்பதற்காகப் பாற்கடலின் கீழிருந்த அமிர்தத்தை மந்தர மலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கடைந்து எடுத்ததாகவும் அப்பொழுது அவர்கள் மத்தாக உபயோகித்த மந்தர மலை தண்ணீரில் மூழ்கிப் போகாமலிருக்க கூர்ம உருவம் தாங்கிச் சென்று அதைத் தாங்கினதாகவும் சொல்லப்படுகிறது. இதை ஆராய்வோம்:—

மந்தர மலையைக் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள் என்பதில் ஒன்றும் அதிசயமில்லை. ஏனெனில் அக்காலத்தில் மலைகள் எல்லாம் ஓரிடத்திலிருந்து பறந்து மற்றோரிடத்துக்குப் போய்க் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுவதாலும், அனுமான் மலைகளை வேரோடு பிடுங்கி வந்து சமுத்திரத்தில் போட்டு இலங்கைக்குப் பாலம் கட்டினதாகவும் சொல்லப்படுவதால் மந்தர மலையை அதன் இடத்திலிருந்து பெயர்த்து மத்தாக உபயோகித்தார்கள் என்று சொல்வது அதிக சந்தேகத்தை உண்டாக்காது. மற்றும் திருமால் தன் சக்தியால் மலையை அந்தரத்தில் நிறுத்த முடியாமல் ஆமையுருவம் தாங்கிச் சென்று நிறுத்தினார் என்பது தான் சந்தேகத்திற்கிடமாக இருக்கிறது. இருக்கட்டும், அவர் என் அமிருதம் உண்டாக்க வேண்டும்? பிறகு அதைக் கடலில் ஒளிக்கவேண்டுமோ? பிறகு பாற்கடலைக் கடைய ஏற்பாடு, செய்ய வேண்டும், பிறகு ஆமையாக மாறவேண்டும் என்பது தெரியவில்லை. இவ்வளவு கஷ்டங்களுடன் அமிருதத்தை அடைவதை விடத் தன் சக்தியினால் வேறு உண்டாக்கிக் கொள்ள முடியாது போலும்! இது இருக்கட்டும்: சமுத்திரம் கடைந்த காலத்து அதிலிருந்து சந்திரன், ரம்பை வெள்ளை யானை, வெள்ளைக் குதிரை, லட்சுமி முதலிய பல பொருள்கள் வந்ததாகச் சொல்லப்படுகிறது. அவைகளைச் சுயநலப் புலிகளான தேவர்களே வைத்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறதே யொழிய, தங்களோடு உழைத்தவர்களும் தங்களைவிடச் சிரமப்பட்டவர்களுமான அசுரர்களுக்கு ஒன்றாவது கொடுத்ததாகக் காணவில்லை. இப்படியிருக்க புராணிகர்கள் புளுகியிருப்பதுபோல் அமிருதம் முழுவதும் அடைய முயற்சிப்பதில் தானென்ன குற்றமிருக்கிறது? இவ்வளவு பெரிய குற்றத்திற்கு இவர்களைத் தண்டிக்கத் திருமாலின் சக்தி ஓர் அழகிய பெண் உருவம் எடுத்துச் சென்று ஏமாற்றுதலில் தானோ இருக்கத்து? என்னே கடவுளரின் காருண்யம் இருந்தவாறு!

இனி அடுத்த அதாரமாகிய வராக அவதாரத்தை எடுத்துக்கொள்வோம். யாரோ ஒரு அசுரனாம். அவன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய் சமுத்திரத்தில் நுழைந்துகொண்டானாம். அதற்காகப் பாற்கடல், (தயிர்க்கடல், நெய்க்கடல் உண்டுபோலும். நான் இதுவரை சிறிதளவு படித்தவரையில் எந்தப் பூகோளப்புத்தகத்திலும் பாற்கடல் ஒன்று இருந்ததாகவாவது, இருப்பதாகவாவது படிக்கவில்லை. இனிமேல் கண்டுபிடிப்பார்கள் போலும்! அல்லது தேவ உலகம் பாதாள உலகம் என்று சொல்லப்படும் எதாவது ஒன்றில் இருக்கும் போலும் பள்ளிகொண்டிருப்பவராகிய மகாவிஷ்ணுவ ராக உருவம் (பன்றி) தாங்கிச்சென்று அவனைக்கொன்று பூமியை அதன் நிலையில் நிறுத்தினாராம். இதை ஆராய்வோம். மகாவிஷ்ணுவுக்குப் பன்றியைவிட வேறு உருவம் எடுக்க அதுசமயம் மனதில் உதிக்கவில்லைபோலும். பன்றி உருவம் எடுத்ததில் என்ன அநுகூலம் ஏற்பட்டதோ அதுவும் விளங்கவில்லை. பன்றியாக இருந்தால் சேற்றில் தான் புரளுமே, சமுத்திரத்தின் கீழாக மூழ்கிப் போகும் பன்றி ஒன்றையும் நாம் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. அல்லது கடவுள் சக்தியால் அவ்வாறு மூழ்கிச் சென்றது போலும். முதல் இரண்டு அவதாரங்களில் திரு

மாலுக்கு முறையே மீனுருவும் பிறகு அதைவிட சற்று உயரிய ஆமை யுருவும் கொடுக்கப்பட்டன. ஆகவே அடுத்த அவதாரத்துக்கு வேறு அதைவிட சிறந்த மிருக உருவுகொடுக்க எண்ணி அதுசமயம் அவர் கள் மனதில் தோன்றிய பன்றி உருவை அளித்தனர்போலும். இவ் வாறு இவருக்குத் திருவுருவங்கள் கொடுப்பது திருமாலின் மேல் காண்பிக்கும் நம்பிக்கையேயாகும். ஆனால்அவர்கள் புளுகுகள் சற்று அதிகமாக போய்விட்டன. மற்றும் முன்காலத்தில் புராணிகர்கள் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று தாங்கள் கண்டவை களையெல்லாம் உண்மையென்று நம்பி இருந்தார்கள். ஆகவே தாங் கள் கண்களால் பார்க்கின்ற பிரகாரம் பூமி தட்டை(பாய்போல் தட்டை யாக அவர்களுக்குத் தோன்றியபடியால்) என்று எண்ணி கண்டபடி புளுகி எழுதிவிட்டார்கள். அவர்கள் கண்களால் கண்டபடி தட்டை என்றுஎழுதினதற்கு நாம் அவர்களைக் கட்டாயம் மெச்சிக்கொள்ளவே வேண்டும். எனென்றால் அவர்கள் மற்ற இடங்களில் கண்டபடி புளுகியிருப்பதைப்போல் இதிலும் புளுகுகளைச் சேர்த்து பூமி வலைந்து வலைந்து இருக்கிறது என்று எழுதியிருந்தாலும் நம்மவர் களின் அநேகர் நம்பியிருப்போமன்றோ? மற்றும் அவர்கள் புழுகுகளைப் பற்றி மற்றவர்கள் சந்தேகம் கொள்ளாமலிருக்கும்படி இதைப் பக்தி யோடு காலை மாலை இருவேளையும் படித்தால் எவ்வளவு அக்கிரமங் களைச் செய்திருந்தபோதிலும் சரியே, மோட்சத்தை அடைவானென்று முடிவுரை எழுதி நம் முன்னோர்கள் கண்களிலும் நம்மவர்களில் அநேகர் கண்களிலும் மண்ணைத்தூவி வந்திருக்கிறார்கள். நாம் அவர்கள் எழுதி வைத்திருக்கும் புராணப் புளுகுகளை நம்புவதாயின் இக்காலத்தில் பலமேனாட்டு பூத பௌதிகச்சாஸ்திரிகள் பலகண்ணாடிக் கருவியின் உதவியால் பூமி உருண்டை என்று கிருபித்திருப்பது பொய் யாகவன்றோ முடிகிறது! இவர்கள் புராணிகர்கள் போல் புராணங்கள் எழுதிவைக்கவில்லை. நம்பினால் மோட்சம் சித்திக்குமென்று சொல்லு வதில்லை, ஆனால் கண் கூடாகக் காட்டுகின்றார்கள். இவைகளில் எதை நம்புவது? புராணிகர்களையா? பூத பௌதிக சாஸ்திரிகளையா? மோட்சம் வேண்டும் என்பவர்கள் வேண்டுமானால் புராணங்களைக் கட்டிக்கொண்டு அழட்டும், நாம் உண்மை எதுவோ அதை நம்புவோம்.

உண்மையில் பூமி உருண்டை வடிவமாக இருக்கிறது என்பது யாவருக்கும் தெரியும். ஆகவே இதை நம்புவோமானால் பூமியை எவ்வாறு அசுரன் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய் இருப்பான் என் பது விளங்கவில்லை. ஆகவே திருமால் எடுத்தான் என்று சொல்லப் படும் ஒவ்வொரு அவதாரத்திலும் புளுகும், பித்தலாட்டமும் நிறைந் திருக்கிறதென்பதே ஒழிய உண்மை கொஞ்சமாவது கிடையாது. மற்றும் இதைப்போன்ற பல சிறிய கதைகள் அநேக இடங்களில் வழங் கப்பட்டு வருகின்றன. மகாபலிபுரம் என்று சொல்லப்படும் இடத்தில்

ஒரு பெரிய உருண்டையானபாராங்கல் ஒன்று ஒரு பாறைமேல் இருக்கிறது. அதைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறார்கள். அதாவது சீதை ஒரு காலத்தில் அங்கு வசித்த பொழுது வெண்ணெய் உருட்டி வைத்ததாகவும் அது இப்பொழுது கல்லாக மாறிப்போய் விட்டதாகவும் சொல்லப்படுகிறது. சீதைக்கு எங்கே அவ்வளவு பெரிய வெண்ணெய் கிடைத்ததோ தெரியவில்லை. இது அநேக ஆயிர வருஷங்களாக வெளிப்பரப்பில் இருந்தும் பறவைகள், மிருகங்களாலும் காற்று மழை வெய்யல் முதலியவைகளாலும் சேதப்படாமல் கல்லாகமாறினது இன்னும் விசேஷமே. சீதை அவ்வளவு பெரிய வெண்ணையை எடுத்து உருட்டிவைக்கஅவளுக்கு [சூர்ப்பணகைக்கு பெரியகாங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது) அரக்கியர்களைப்போல் பெருத்த உடலும் பலமும் இருந்தது போலும். இதற்கு நேர் விரோதமாக மற்றோர் கதை உள்ளது. அதாவது ஓரிடத்தில் (இடம் சரியாக ஞாபகத்துக்கு வரவில்லை) சீதை தன் கையைப் பூமியில்ஊன்றிக்கொண்டு உட்கார்ந்திருந்ததாகவும், அக்காலத்து அவளது கையின் மூன்று விரல்கள் மாத்திரம் அங்கிருந்த பாறைகளில் பதிந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. அங்கு இருக்கும் துவாரங்களில் நம்மவர்களின் விரல்களை எவ்வாறு நுழைக்கப் பார்த்தபோதிலும் துவாரம் மிகச்சிறியதாகையால் நுழைக்க முடிவதில்லை. ஆகவே இதிலிருந்து சீதையின் காம் மிகவும் சிறியது என்று ஏற்படுகின்றது. இவைகளில் எதை நம்புவது? அல்லது இரண்டு கதைகளும் பொய்யா? இவைகளைப்போல் இன்னும் அநேக கதைகள் உள்ளன. அவைகளை எழுதப்புகின் விரியும்.

இன்னும் காலாயிர திவ்விய பிரபந்தம் போன்ற வேதங்களைக் கவனிப்போமானால் மகா ஆபாசக்களஞ்சியமாகப் புலப்படும். அதில் ஒரு பக்தர் திருமாலை எவ்வாறு அழைப்பது என்று தெரியாமல்,

"தத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல்,கோதை நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர் மார்பா வாய்திறவாய்"

என்று வேண்டுகிறார். என்ன சொற்சுவை பொருட்சுவையின் மேன்மை இருந்தவாறு! இம்மாதிரியானவைகளை எழுத வேறு இடம் கிடைக்காமல் புராணங்களில்,(எனெனில் இவைகளைப் படிக்க பக்தி மூற்றிப்போயிருக்க வேண்டுமாகையால்) புகுத்தினர் போலும்.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⊜(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	...	...	ரூ. 0 5 0
பிரகிருதிவாதம்	...	...	,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	...	,, 0 5 0

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	...	,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த கன்மையென்ன?	...	...	,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	...	,, 0 3 0
கடவுள்	...	...	,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	...	...	,, 0 3 0
வால்ட்டேர்	...	...	,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு	...	...	,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	...	,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	...	...	,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	...	,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்	1-ம் பாகம்		0 6 0
ஷை	2-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்			0 4 0
ஷை	2-ம் பாகம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண் ஜூரிமையும், மதமும்	...	...	,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''நான்காம் பதிப்பு'')	...	...	,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)			0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	நீத்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்)	0	8	0
2.	எண்ணும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்குரண் இவ்வுலகமில்லை	0	1	0
6	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7	,, அயோத்தியாகாண்டம் (200பக்கம்)	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் கான்காம்பதிப்பு200பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.)	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷவிக் முறை	0	1	0
22.	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
24.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
25.	மனுநீதி விளக்கம்	0	2	0
26.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
27.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
28.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
29.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
30.	கர்ப்ப ஆட்சி	0	6	
31.	ராவண்ப் பெரியார்	0	5	0
32.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
33.	ராகம் எங்கே?	0	2	
34.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
35.	கலைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டுரை	0	5	0
36.	பரிணாமவாதம் உண்மையா?	0	4	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ரோடு.

Printed and Published by E. V. Krishnaswamy at the
Unmai vilakam Press, Erode.